# பிற்காலத் தமிழ் வட்டெழுத்து

இரா. கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ.



# பிற்காலத் தமிழ் வட்டெழுத்து

கேரளத்தில் வழங்கிய
பிற்கால வட்டெழுத்துகளை நுணுகி ஆராய்ந்து கூறும்
ஆய்வு நூல்

வெளியீட்டாளர்
இரா. கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ.
161, அண்ணா சாலை, சென்னை.600 002.

Bibliographical Data

| | | |
|---|---|---|
| Title of the book | .. | PIRKALA TAMIL VATTELUTHU |
| Author | .. | R. KRISHNAMURTHY M.A. |
| Language | .. | TAMIL |
| Edition | .. | FIRST |
| Publisher | .. | R. KRISHNAMURTHY M.A.<br>161, ANNA SALAI. MADRAS-2. |
| Copyright holder | .. | R. KRISHNAMURTHY, M.A.<br>161, ANNA SALAI, MADRAS-2. |
| Paper used | .. | |
| Size of the book | .. | DEMY |
| Type points used | .. | 10 POINT |
| Number of Pages | .. | 112 |
| Printers | .. | RASANA OFFSET PRINTS,<br>275, ROYAPETTAH HIGH ROAD,<br>MADRAS-14 |
| Price | .. | Rs. 15.00 |
| Proof correction | .. | PULAVAR THAMARAIKKANNAN |

இரா. கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ.

# பிற்காலத் தமிழ் வட்டெழுத்து

முதல் பதிப்பு: ஏப்ரல் 1985
உரிமை: ஆசிரியருக்கே

விலை: ரூ. 15.00

அச்சகம்:
ரசனா ஆஃப் செட் பிரிண்டர்ஸ்
275, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
சென்னை 600 014

## பக்கப் பார்வை

vii முன்னுரை
1. எழுத்துக்களின் வரலாறு
19. அசோகர் பிராமியும், தமிழ பிராமியும்
24. தமிழ் வட்டெழுத்து
31. வட்டெழுத்தின் வளர்ச்சி
36. தமிழும் மலையாளமும்
47. கேரளமும் வட்டெழுத்தும்
53. பிற்கால வட்டெழுத்து
57. உயிர் எழுத்துகள்
65. மெய் எழுத்துகள்
69. உயிர்மெய் எழுத்துகள்

# முன்னுரை

தமிழ் மொழி மிகத் தொன்மையான மொழி. இத்தொன்மை மொழியை எழுதுவதற்குக் கடந்த சுமார் 2300 ஆண்டுகளாகப் பல்வேறுபட்ட எழுத்துமுறைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

தொன்மைக்காலத்தில் "தமிழ் பிராமி" அல்லது "தென் பிராமி" எழுத்து வடிவத்தைப் பயன்படுத்தினர். இந்த எழுத்துமுறை கி.பி. மூன்றாம் நூற்றாண்டுவரை வழக்கில் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டிலிருந்து வட்டெழுத்து, தமிழ் பிராமியிலிருந்து பிரிந்து, மெல்ல மெல்ல வளர்ச்சியடைந்து சோழநாடு நீங்கலாகத் தமிழகத்தின் பிறபகுதிகளில் பரவியிருக்கலாம் என்று கருத இடமுண்டு.

வட்டெழுத்து பாண்டிய நாட்டில் கி.பி. பத்தாம் நூற்றாண்டு முதல் வீழ்ச்சியுறத் தொடங்கிப் பின்னர் மறைந்து விட்டது.

கொங்கு நாட்டில் பதினொன்றாம் நூற்றாண்டு வரை வழக்கில் இருந்ததாகச் சான்றுகள் உள்ளன.

தமிழகத்திலிருந்து சோழர்களால் அகற்றப்பட்ட வட்டெழுத்து, சேர நாட்டில் மேலும் பல நூற்றாண்டுகள் வழக்கில் இருந்திருக்கிறது.

தென் கேரளத்தில் 'மலையாண்மா' என்ற பெயருடனும், வட கேரளத்தில் 'கோலெழுத்து' என்ற பெயருடனும் பிற்கால வட்டெழுத்து வழக்கில் இருந்திருக்கின்றது.

தற்காலத் தமிழ் எழுத்து வடிவுங்கள், தமிழ் பிராமியிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டிப் பிரியத் தொடங்கித் தனித்தன்மை பெற்று வளர்ச்சியடைந்ததாகப் பல தொல்லெழுத்து அறிஞர்கள் கருதுகின்றனர். தற்காலத் தமிழ் எழுத்து வடிவங்களின் சாயல் அடங்கிய கல்வெட்டு முதன் முதலாக கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தான் காண முடிகிறது.

தமிழின் தொன்மையான எழுத்து வடிவங்களில் தமிழ் பிராமிக்கு அடுத்த இடத்தை வகிப்பது வட்டெழுத்து ஆகும்.

நான் இத்தொன்மையான எழுத்தைக்குறித்து சுமார் பத்து ஆண்டுகளாக ஆராய்ந்து வருகிறேன். அந்த ஆராய்ச்சியின் பயனாக 1980 ஆம் ஆண்டு தமிழ் வட்டெழுத்து என்ற புத்தகத்தை எழுதினேன். அந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து மேற்கொண்டு சேர நாட்டில் தமிழ் வட்டெழுத்து என்ற புத்தகத்தை 1982 ஆம் ஆண்டு எழுதினேன். சேரநாட்டு வட்டெழுத்தை ஆராய்ந்த முதல் தமிழ் நூல் இதுவே ஆகும். கேரளத்தில் மலையாள மொழி தோன்றிய பின்னும் வட்டெழுத்து பாமர மக்களின் வழக்கிலிருந்து அழிந்து விடவில்லை என்பதை உணர்ந்தேன். இதனால் பிற்கால வட்டெழுத்தின் அமைப்புகள் பற்றிய புதிய ஆராய்ச்சியில் ஈடுபட்டேன்.

கேரளத்தின் தென்பகுதியில் வழக்கில் இருந்த 'மலையாண்மா' என்ற பிற்கால வட்டெழுத்து வகையை, அடிப்படையாகக் கொண்டுதான் இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இந்த எழுத்துக்களின் எல்லா வடிவங்களையும் சேகரிப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆயிற்று.

இப்பணிக்குப் பெரிதும் உதவியவர்களில் கோழிக்கோடு, பல்கலைக் கழகத்தின் மலையாள மொழிப் பேராசிரியர் டாக்டர் சுகுமார் ஆழிக்கோடு அவர்களும் திருவனந்தபுரத்தில் இருக்கும் கேரளப் பல் கலைக்கழக ஓலைச்சுவடிக் காப்பக இயக்குநர் டாக்டர் டி. பாஸ்கரன் அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இப்பணிக்கு ஆரம்ப காலத்தில் பெரிதும் உதவியவர் பேராசிரியர் சுகுமார் ஆழிக்கோடு அவர்களே! அவர் பல ஓலைச் சுவடிகளின் புகைப்படங்களைத் தந்து உதவினார். அவரது அலுவலகத்தில் வேலை பார்த்த திரு. வலியத்து ஏ.பி. நாயர் அவர்கள் அச்சுவடிகளைப் படித்துக் கொடுத்தார். இவர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேகமாகச் சென்ற என் ஆராய்ச்சி, திடீரென்று தடைபட்டது. கிடைத்த சில ஏடுகளை மட்டும் வைத்துக் கொண்டு எல்லா எழுத்து வடிவங்களையும் அறிந்து கொள்ள இயலாது என்பதை உணர்ந்தேன்.

இத்தருணத்தில் கேரளப் பல்கலைக் கழக ஓலைச் சுவடிக் காப்பக இயக்குநர் டாக்டர் டி. பாஸ்கரன் அவர்கள் என் ஆய்வு தொடர்வ தற்குப் பெரிதும் உதவினார்.

ஏராளமான, பழைமையான ஓலைச் சுவடிகளின் புகைப் படத்தைக் கொடுத்தும், அவற்றைப் படித்தும் கொடுத்தார். அவரது உதவிகள் கிட்டாதிருந்தால் இப்புத்தகம் வெளியிடும் வாய்ப்பு இருந்திருக்காது. டாக்டர் டி. பாஸ்கரன் செய்த உதவியை நான் என்றும் மறக்க முடியாது.

சுமார் எண்ணூறு ஆண்டுகளாகப் பாண்டிய நாட்டிலும் கொங்கு நாட்டிலும், சேர நாட்டிலும், பல்லவ நாட்டின் சில பகுதிகளிலும் வழக்கிலிருந்த வட்டெழுத்து அரசியல் மாற்றம் காரணமாகச் சேர நாட்டைத் தவிர பிற பகுதிகளிலிருந்து வழக்கொழிந்தது.

சேர நாட்டுடன் இணைக்கப்பட்டிருந்த இப்பிணைப்பு அறுபட்ட வுடன், சேர நாட்டு மொழி தன் விருப்பம் போல் புதிய திசையை நோக்கிச் செல்லத் தொடங்கியது. வடமொழியின் தொடர்பு அதிகரித் ததால்,சேர நாட்டுத் தமிழ் மணிப்பிரவாள நடையைப் பெற்று, பிறகு மலையாளம் என்ற தனி மொழியாயிற்று. காலப்போக்கில் சேரநாட்டில் பயன்படுத்திய வட்டெழுத்தும் ஆட்சியாளர்களிடம் செல்வாக் கிழந்தது.

மலையாள மொழிக்குச் 'கிரந்த' எழுத்தைப் பயன்படுத்திப் புதிய ஓர் எழுத்துமுறையை உருவாக்கினர். இவையெல்லாம் கடந்த எழு நூறு ஆண்டுகளுக்குப்பட்டே நடந்ததாக கருதப்படுகிறது.

சமீப காலமாக மலையாள மொழியில் கலந்துள்ள வடமொழிச் சொற்களை அகற்ற வேண்டுமென்ற இயக்கம் வலுப்பெற்று வரு கின்றது. இம்முயற்சி வெற்றி பெறுமானால் வடமொழி அகற்றப்பட்ட மலையாளம் தனது தமிழ்ச் சாயலைப் பெற்றுவிடும். அம்மொழியி லிருந்து அவசியமான சில வடமொழிச் சொற்களை அகற்றி விட முடியாது என்பதும் உண்மை.

அவ்வாறு திருந்திய மலையாள மொழிக்கு வட்டெழுத்தையே பயன்படுத்தலாம். அதற்குச் சில குறியீடுகளை மட்டும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அந்தப்புதிய எழுத்துமுறையை தமிழ் எழுதவும்,

மலையாளம் எழுதவும் பயன்படுத்தலாம். இந்த எழுத்துமுறை, மொழி வல்லுநர்கள் பயன்படுத்துவதற்கு மட்டுமே பயன்படும். இதனால் மலையாள அறிஞர்கள் தமிழையும், தமிழ் அறிஞர்கள் மலையாள மொழியையும் எளிதில் படிக்க வாய்ப்பு ஏற்படும். விலகிச் சென்ற மலையாள மொழியை மீண்டும் தமிழ்த்தாய் தன் அரவணைப்பில் வைத்துக் கொள்ளலாம்.

தமிழ் ஆராய்ச்சி மாணவர்கள் 'மலையாண்மா' எழுத்து முறையை நன்கு கற்றுக் கொண்டு கேரளத்தில் கிடைக்கும் பல தொன்மையான சுவடிகளைப் படித்தால் பண்டைத் தமிழ் மொழியின் அரிய சொற்களை அறியலாம், அவை வழங்கி வந்த சூழ்நிலைகளையும் அறியலாம். தமிழ் எழுத்து வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் மலையாளமாக மாறிய வரலாறு, தமிழ் ஆட்சி வரலாறு போன்ற பல வரலாற்று உண்மைகளையும் நாம் குழப்பமில்லாமல் அறிந்து கொள்ள இயலும்.

இக்கால ஆராய்ச்சி மாணவர்களின் நுண்மாண் நுழைபுல அறிவு, அயராத உழைப்பு, உண்மையைக் கண்டறிய வேண்டும் என்ற ஆர்வம் முதலியவற்றை நான் நன்கு அறிவேன். அவர்கள் மேற்கண்ட முயற்சி களை மேற்கொண்டு தமிழ் வரலாற்றுக்குப் பல புதிய உண்மைகளைத் தருதல் வேண்டும்; அதற்குத் தூண்டு கருவியாக இந்த நூல் அமைதல் வேண்டும் என்பதே என் விழைவு.

அச்சுப் படிகளைத்திருத்தி இந்த நூல் வெளிவர உடன் இருந்து உதவிய நண்பர் புலவர் தாமரைக்கண்ணன் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

அன்புள்ள,

(ஒ-ம்) இரா. கிருஷ்ணமூர்த்தி.

# எழுத்துகளின் வரலாறு

## மொழியின் தோற்றம்

'மொழி முதற் காரணமாம் அணுத் திரள் ஒலி' என்பார், நன்னூலார். மொழி, முதலில் ஒலி வடிவம் பெற்றது.

மாந்தரின் நாகரிக முதிர்ச்சியும் அறிவுத் தெளிவும் தோன்றிய பின்னர் மொழி வரிவடிவத்தை ஏற்றது.

ஒரு மொழியின் எல்லா அம்சங்களையும் வெளிப்படுத்தும் எழுத்து முறை தோன்றி, சுமார் ஐந்தாயிரம் ஆண்டுகள் ஆகியிருக்கும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

## எண்ணங்களை வெளிப்படுத்தும் சித்திரங்கள்

பத்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, மனிதன் காட்டு மிராண்டியாகக் குகைகளில் வாழ்ந்த காலத்தில், அவன் தங்கியிருந்த குகைகளிலும் பக்கத்திலுள்ள பாறைகளிலும் சித்திரங்கள் வரைந்து தன் எண்ணங்களை வெளிப்படுத்தியிருக்கிறான் என்பது சிந்தனைக்குரியது.



தென் ரொடீசியாவிலுள்ள
பாறை ஓவியம்.
மழையைச் சித்திரிக்கிறது

FIG. 4.—ROCK PAINTING FROM SOUTHERN RHODESIA DEPICTING RAIN CEREMONY

From Leo Frobenius and Douglas C. Fox, *Prehistoric Rock Pictures in Europe and Africa*, (New York, 1947), p. 47

## முழுமையான எழுத்து வடிவம்

மொழி முழுமையான எழுத்து வடிவம் கொண்ட காலம் சுமார் கி.மு. 3200 முதல் கி.மு. 2200 வரை உள்ள காலமாகும்.

எகிப்தியர்களும் ஒருவகை எழுத்து முறையை உருவாக்கினர். அதுகாறும் வழக்கிலிருந்த சித்திர எழுத்துக்களுடன் எண், பால்




FIG. 54.—PICTORIAL SIGNS IN THE SUMERIAN, EGYPTIAN, HITTITE, AND CHINESE WRITINGS

சுமேரியர், எகிப்தியர், ஹிட்டைட், சீனர் சித்திர எழுத்துகள்




பினீசியர்களின் கடல் வாணிபத்தைக் குறிக்கும் படம்

இவற்றைக் குறிக்கக் கற்றனர். சில ஒலிக் கட்டுகளைக் குறிக்கும் குறியீடுகளைக் கண்டு பிடித்தனர்.

அதே நேரத்தில் பினீசியர்களும் (Phoenecians) தொன்மை எழுத்து முறைக்குப் பெரிதும் உதவியுள்ளனர்[1].

## பினீசியர்களின் இருப்பிடம்

பினீசிய என்ற பெயர் கிரேக்கர்களால் கொடுக்கப்பட்டது.

தற்போது 'லெபணன்' (Lebanon), 'இஸ்ரெயில்' (Israel) நாடுகள் இருக்கும் பகுதியில் கடற்கரை ஓரமாகப் பல நகரங்கள் இருந்தன. இந்த நகரங்களில் வாழ்ந்த மக்களுக்குப் 'பினீசியர்' என்ற பெயரும், அப்பகுதிக்குப் 'பினீசிய' என்ற பெயரும் வழங்கி வரலாயிற்று. பினீசியர் ஒரு கூட்டாட்சியின் கீழ் வரவில்லை. பினீசியர்கள் என்ற பொதுப் பெயரில் சிறுசிறு கூட்டமாக வாழ்ந்தனர்.

## வாணிகத் தேவைக்காகத் தோன்றிய எழுத்துமுறை

பினீசியர் நாட்டில் 'சிடார்' (Cedar) என்று அழைக்கப்படும் சிறப்பான மரம் அதிகமாக வளர்ந்தது. இதை எகிப்தியர்களும், அஸ்ஸிரியர்களும் பெரிதும் விரும்பி வாங்கினர். இந்த மர வாணிகத்தைத் தொடர்ந்து அவர்கள் கப்பல் கட்டும் தொழிலிலும் ஈடுபட்டனர்.

அவர்களது கலை வளர்ச்சி, வணிகத் தேவையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. வெளி நாடுகளிலிருந்து தந்தம், பொன், வெள்ளி, பட்டு மற்றும் நவரத்தினங்கள் இறக்குமதி செய்து அவற்றை அழகிய கைவண்ணப் பொருட்களாக மாற்றி ஏற்றுமதி செய்தனர்.

பினீசியர்கள்தாம் முதன் முதலில் கண்ணாடியைப் பயன்படுத்தி ஜாடிகள் செய்யும் நுட்பத்தைக் கண்டு பிடித்ததாகக் கருதப்படுகிறது.

அவர்களது நாடு கிழக்கு நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையில் இருந்ததால் அவர்களின் கப்பல் வாணிகம் பெருகியது. அவர்கள் வாணிகத்திற்குத் தேவையான சிறந்த கப்பல்களைச் செய்தனர். அந்தக் கப்பல்களைப் பயன்படுத்தி நீண்ட நெடுந்தூரம் பயணம் செய்தனர்.[2]

கப்பலின் நீளம் 29.7 மீட்டர். அகலம் 9.9 மீட்டர்.

வாணிகம் சிறுக்கும் சமயங்களில் கடற் கொள்ளையே பினீசியரின் முக்கியத் தொழிலாக இருந்தது.

தந்தத்திற்கு அவர்கள் ஆப்பிரிக்க நாடுகளுடனும் இந்திய மேற்குக் கரையுடனும் தொடர்பு கொண்டு இருந்ததாகக் கருதப்படுகிறது.

பினீசியர்கள் இந்தியாவுடன் வர்த்தகம் செய்வதற்கு ஏற்றபடி ஜிப்ரால்டர் பகுதியிலிருந்து இந்தியா வரை கடற்கரை ஓரமாகப் பாதுகாப்பான இடங்களில் வாணிகக் கிடங்குகள் வைத்திருந்ததாகக் கருதப்படுகிறது.

---

1. Insights into the lives of Phoenicians
—The German Tribune No1114 - Ist January 1984
2. Unesco - Features - The Hindu. Sept.5. 1982



பினீசியர்கள் பயன்படுத்திய கப்பல்கள்[1]

பினீசியர், கலைத்திறன் மிகுந்தவர்கள். அவர்களது கலைத்திறனுக்கு எடுத்துக் காட்டாகச் சில படங்களைப் பார்க்கலாம்.



பினீசியர்களின் வெண்கலச் சிற்பங்கள்[2]

---

1. History of Transportation — Bostan's Museum of Science Booklet Page 2
2. The causing of civilisation —The Phoenicians, St Michel P. 42

திருநெல்வேலி மாவட்டம் ஆதிச்சநல்லூர் புதைபொருள் ஆராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட சில பொருட்கள் பினீசியர் பயன் படுத்தியதை ஒத்திருக்கின்றன.[1]



Guide to Bronze Gallery
Government Museum
Madras.

**திருநெல்வேலி மாவட்டம்**
**ஆதிச்ச நல்லூர் தாய்க் கடவுள்**

**MOTHER GODDESS**

*Adichanallur, Tirunelveli Dt.*

*About seventh Century B.C.*

---

1. The Dravidian Elements in Indian Culture — Dr. Gilbert Slater - page-47.




பினீசியர்களின் தந்த பொம்மை[1]

பினீசியர்கள் பிறநாட்டினருடன் பெருமளவில் வாணிகம் செய்தனர். வாணிகம் பெருகியதால் வாணிகத்திற்குத் தேவையான குறிப்புகள் தேவைப்பட்டன.

உலகிலுள்ள எல்லா மொழிகளிலும், முப்பது ஒலிக்கூறுகள்தாம் உள்ளன என்பதை அவர்கள் தெரிந்து வைத்திருந்தனர். இதன் அடிப் படையில் 22 எழுத்துகளைக் கொண்ட ஓர் எழுத்துமுறையை உருவாக் கினர். இந்த எழுத்துமுறை மிக எளிதாகவும், பிறர் புரிந்துகொள்ளும் நிலையிலும் அமைந்திருந்தது.

---

1. Ref: Where did Ancient Traders Sail – Mysteries of past P. 167

## எழுத்துமுறை
## சீராக அமைந்த காலம்

பினீசியர் எழுத்துமுறை பைப்பிலோஸ் நகரில் கி.மு. இரண்டாயிரம் ஆண்டு வாக்கில் உருவாகியிருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்த எழுத்துமுறையில் இருந்த குழப்பங்கள் குறைந்து சுமார் கி.மு. 11—ஆம் நூற்றாண்டில் ஓரளவு ஒரே சீராக அமைந்து விட்டதாகக் கருதுகின்றனர். அதற்குப் பின்னர் அதிகமான மாற்றங்கள் ஏற்படவில்லை. அப்போது எழுத்துகள் இடமிருந்து வலமாக எழுதப்பட்டன.




FIG. 70.—AḤIRÂM INSCRIPTION FROM BYBLOS

From R. Dussaud in *Syria*, v (1924), p. 137, fig. 2, and p. 143, fig. 4

பைப்பிலோஸ் நகரில் கண்டெடுக்கப்பட்ட மிகப் புராதனமான கல்வெட்டு

## இந்திய எழுத்து முறைக்கு அடிப்படை பினீசியரின் எழுத்து முறையே!

பினீசியர்களின் எழுத்துமுறைதான் உலகிலுள்ள எல்லா எழுத்து முறைகளுக்கும் தாயகம் என்று கருதப்படுகின்றது. ஐரோப்பிய நாட்டு எழுத்து முறைகளும் அபிசீனிய எழுத்து முறையும் இந்தியாவின் எழுத்து முறையும் பினீசியரின் எழுத்து முறையிலிருந்துதான் தோன்றின.[1]

1. The Alphabet by Issac Taylor Vol. II

| TRANS - ILTERATION | PHOENICIAN |
|---|---|
| ) | K |
| B | 9 |
| G | 1 |
| D | Δ |
| Ḏ | |
| H | ∃ |
| W | Y |
| Z | I |
| H | 目 |
| Ḫ | |
| Ṭ | ⊕ |
| Ẓ | |
| I | ᘔ |
| K | ↓ |
| L | ʟ |
| M | ξ |
| N | ϟ |
| S | ≢ |
| ʿ | o |
| Ġ | |
| F (P) | ? |
| S | ⊢ |
| Ḍ | |
| Q | Φ |
| R | 9 |
| Ś | |
| Š | W |
| T | +, × |
| Ṯ | |

பினீசியர்களின் எழுத்துகள் வலப் பத்தியில் உள்ளன. அதற்கு ஏற்ற ஒலியைக் குறிக்கும் ஆங்கில எழுத்துகள் இடப் பத்தியில் உள்ளன.

Issac Taylor - The Alphabet
Vol.I. page.343.

## கி.மு. ஆறும் நூற்றாண்டுக்கு முன்னர் இந்தியாவின் எழுத்து நிலை

இந்தியத் துணைக் கண்டத்தின் வடபகுதியில் கி.மு. 6—ஆம் நூற்றாண்டுக்கு முன் எந்தவித எழுத்து முறையும் இருந்ததில்லை என்று மேலைநாட்டுத் தொல்எழுத்தறிஞர்கள் கருதுகின்றனர்.[1]

பிராமி எழுத்து, அசோகர் காலத்தில் திடீரென்று தோன்றி, வளர்ச்சியடைவதைக் காண்கிறோம். அசோகரின் காலத்தில் இந்த எழுத்துமுறை அவருடைய பேரரசு முழுவதும் பரவியிருந்தது. இந்த எழுத்துமுறை எளிமையானது. எழுத்துகளில் நல்ல வளர்ச்சியும் வடிவச் சீர்மையும் காணப்படுகின்றன. இந்த எழுத்துமுறை படிப்பதற்கு எளிமையாகவும் தவறுகள் அதிகம் வருவதற்கு வாய்ப்பில்லாமலும் அமைந்து இருந்தது.

"மொழியியல் வல்லுநர்கள் தோற்றுவித்த எழுத்து முறைகளைவிட அழகையும் நயத்தையும் உள் அடக்கி வைத்துக் கொள்ளும் தன்மையை அது பெற்றிருந்தது".[2]

இந்த எழுத்துமுறைக்கு 'அசோகர் பிராமி' என்று பெயர்.

இந்தியா முழுவதும் ஏறத்தாழ கி.மு. 3—ஆம் நூற்றாண்டில் ஒரே முறையான எழுத்துமுறை பரவியிருந்தது.

### பிராமி எழுத்தின் தோற்றம்

பிராமி எழுத்தின் தோற்றம் குறித்துப் பலவித மாறுபட்ட கருத்துகள் உள்ளன.

ஆனால் பெரும்பான்மையான மேற்கத்திய தொல் எழுத்து அறிஞர்கள், பிராமி எழுத்துமுறை இந்தியாவில் தோன்றியது அல்ல என்று வலியுறுத்திக் கூறுகின்றனர்.

இந்தக் கருத்துகளில், சிறந்த தொல் எழுத்து அறிஞரான திரு ஐசக் டெயிலரின் கருத்து கவனத்திற்குரியது. அவர் பெரும்பான்மையான மேலைநாட்டு அறிஞர்களின் கருத்தின் அடிப்படையில் விளக்கமாகப் பலரும் ஒப்புக்கொள்ளும் வகையில் விளக்கியுள்ளார்.[3]

அவர் கருத்து பின்வருமாறு:

#### அசோகர் காலத்திய எழுத்துமுறை

அசோகர் காலத்திய எழுத்துமுறை 'செமிட்டிக்' எழுத்து முறையில் இருந்து தோன்றியது: கி.மு. மூன்றும் நூற்றாண்டுக்கு, முன்பிருந்தே மத்தியதரை நாடுகளுடன், இந்தியா வாணிகத் தொடர்பை வைத்துக் கொண்டிருந்தது.

1. The Alphabet by Issac Taylor Vol. IIp. 289
2. The Alphabet by Issac Taylor Vol. II p. 289
3. The Alphabet – Issac Teylor Vol. II p. 289

பினீசிய மற்றும் அரேபிய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகள் இருந்தன. இந்த நாடுகளில் ஏதாவது ஒன்றிலிருந்து இந்த எழுத்துமுறை இந்தியாவிற்கு வந்திருக்க வேண்டும்.

## வரலாற்று உண்மை

'பினீசியர்களிடமிருந்து நேரடியாக இந்தியாவிற்கு இந்த எழுத்துமுறை வந்திருக்க வேண்டும்' என்று சொல்லும் கருத்து ஏற்கக் கூடியதாக இல்லை. இந்தியாவுடன் சாலமன் அரசன் காலத்திலிருந்து பினீசியர்கள் வாணிகத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர். ஆனால் இத் தொடர்பு கி.மு. 8—ஆம் நூற்றாண்டுடன் முடிவடைந்து விட்டது.

இத் தொன்மையான காலத்திலேயே பினீசியர்களின் எழுத்துமுறை இந்தியாவிற்கு வந்திருக்குமானால் இந்தியா முழுவதும் அசோகர் காலத்திற்கு முன்பே பல்வேறுபட்ட எழுத்து முறைகள் பினீசியர்களின் எழுத்துமுறையிலிருந்து தோன்றி வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். அவ்வாறு பல்வேறுபட்ட எழுத்துமுறைகள் இந்தியாவில் தோன்றி வளர்ச்சியடையவில்லை. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் இருந்துதான் இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான எழுத்து முறையைக் காண்கிறோம்.

## வாணிகமும் மொழிவரலாறும்

பினீசியர்களின் எழுத்துமுறையைப் பினீசியர்களின் மூலம் நேரடியாகப் பெறாமல், வேறு ஏதாவதொரு நாட்டின் மூலமாக இந்தியா பெற்றிருக்கலாம் என்ற எண்ணம் வலுப்பெறுகிறது. அலெக்சாண்டரின் படையெடுப்பிற்கு முன்பே இந்த நாட்டுடன் இந்தியா வாணிகத் தொடர்பு வைத்துக் கொண்டிருக்க வேண்டும். அத்தொடர்பு நிலத்தின் மூலமாகவும், கடலின் மூலமாகவும் நடைபெற்றது.

கி.மு. 10—ஆம் நூற்றாண்டிலிருந்து 3—ஆம் நூற்றாண்டு வரை 'ஏமென்' நகரம் பெரிய சந்தையாக விளங்கியது. இந்தச் சந்தையில், இந்தியப் பொருள்கள் மேலை நாட்டுப் பொருள்களுடன் பண்டமாற்றம் செய்யப்பட்டன. எகிப்து துணி, கண்ணாடி போன்ற பொருள்களை ஏற்றுமதி செய்தது. அவற்றுக்கு மாற்றாக இந்தியக் கப்பல்கள் தந்தம், பொன், மணிகள் மற்றும் கைவினைப் பொருட்களை ஏமெனுக்குக் கொடுத்தது.

இந்த வாணிகம் கரையோரமாகச் செல்லும் கப்பல்கள் மூலமாகவே நடைபெற்றன.

ஏமென், நகரில் வாழ்ந்த மக்கள் 'சேபியர்கள்' என்று அழைக்கப் பெற்றனர்.[1]

1. The Alphabet, Issac Taylor - Vol. I. page. 344



இந்தியா
இந்துமகா சமுத்திரம்
அரபிக்கடல்
ஏடன்
செங்கடல்

## சேபியர்களின் இயற்கை வளமும் வாழ்க்கை வளமும்

சேபியர்கள், தென் அரேபிய நாட்டினர். இவர்களைப்பற்றி கி.மு. எட்டாம் நூற்றாண்டு மெசப்பட்டோமிய நாட்டுத் தொன்மைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அராபிய துணைக்கண்டத்தின் தென் கிழக்கு மூலையில் இவர்கள் வாழ்ந்தனர். அந்த நாட்டை இப்பொழுது 'ஏமென்' என்று அழைக்கின்றனர்.[1]

இயற்கை இந்த நாட்டுக்குப் பல வழிகளில் நன்மை செய்துள்ளது. வறண்ட அந்த உபகண்டத்தில் இப்பகுதியில் மட்டும் மழை பெய்கிறது. இந்திய நாட்டுக்குச் செல்லும் கடல் வழியில் இந்நாடு இருப்பதால், தொன்மைக் காலத்திலிருந்தே இங்கு வாணிகம் செழிப்படைந்திருந்தது.[2]

இஸ்லாமியப் பண்பாடுகள் தோன்றும் காலத்திற்கு முன்பே. இங்கு ஒரு சிறப்பான பண்பாட்டுப் பழக்க வழக்கங்களுடன் மக்கள் வாழ்ந்து வந்தனர்.

## கிறித்துவுக்கு முன்பும் பின்பும்

கிறித்து பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் கிறித்து விற்குப் பின் சுமார் இருநூறு ஆண்டுகள் வரையும் சேபியர்கள் கையில் உலக வாணிகத்தின் பெரும்பகுதி இருந்ததாகக் கருதப்படுகிறது. செங் கடலுக்கும் இந்தியப் பெருங்கடலுக்கும் இடையே நடைபெற்ற கடல் வாணிகத்தையும் இவர்களே தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந் தனர்.

இங்கு கி.மு. ஏழாம் நூற்றாண்டு வரையுள்ள கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த எழுத்து வகை பினீசியர்களின் எழுத்து வகையை ஒத்திருந்தது.[3]

## வாணிக முதன்மையின் சரிவு

கடல் வாணிகத்தில் இவர்கள் வகித்த முதன்மை அழிந்த உடன், இவர்களுடைய செல்வாக்கும் குறைய ஆரம்பித்து விட்டதாகக் கருதப் படுகிறது.[4]

---

1. The Encyclopedia Americana, International Edition, Sabean, p. 77 & 78
2,3,4. Ibid

## எழுத்துகளிடையே பாலம் அமைத்த "ஸாபா"

பினீசியர்களது எழுத்திற்கும், சேபியர்களின் (Sabean) எழுத்திற்கும் இடைப்பட்டு 'ஸாபா' (Safa) எழுத்துமுறை ஒரு பாலமாக அமைந்துள்ளது.

இந்த எழுத்துகள் அடங்கிய கல்வெட்டுகள் "டாமாஸ்கஸ்" பகுதியில் கிடைத்துள்ளன. போரில் இறந்தவர்களுக்கு நடுகல் எடுப்பது போன்ற வழக்கம் இந்த மக்களிடையே இருந்திருக்கிறது. அத்தகைய நடுகல்லில் இந்த எழுத்தைக் காணமுடிகிறது.



நடு கல்லில் போர் வீரனும் — பெண் அடிமையும்

Issac Taylor - The Alphabet
Vol.I. page. 343.




'ஸாபா' எழுத்துகள்

Journal Asiatique - 1877
Essai Sur Les Inscriptions Du Sofa
M.J. Halvey. p. 452.

Vogué n° 5.



'ஸாபா' எழுத்துகள்
Journal Asiatique - 1877
Essai Sur Les Inscriptions Du Sofa
M.J. Halvey. p. 452.

இந்த எழுத்துமுறை வடக்கு செமிட்டிக் முறைக்கும், தெற்கு செமிட்டிக் முறைக்கும் இடைப்பட்ட எழுத்து முறையாக அமைந்துள்ளது.[1]

இந்த ஸாபா, சேபியன் ஆகிய செமிட்டிக் எழுத்துமுறைகளிலிருந்து பிராமி எழுத்துமுறை தோன்றியிருக்கலாம் என்பது ஐசக்டெய்லரின் கருத்து.

## எழுத்துமுறை வருகையைப் பற்றிய அறிஞர்களின் மாறுபட்ட கருத்துகள்.

பிராமி எழுத்துமுறை இந்திய நாட்டிலே தோன்றியதாகச் சில அறிஞர்கள் கருதுகின்றனர். அந்த அறிஞர்களின் கருத்துகள் இன்றியமையாதவை:

### தாஸன் அவர்களின் கருத்து

> பிராமி எழுத்துமுறை கங்கைக் கரையில் தோன்றியிருத்தல் வேண்டும். வெளிநாட்டிலிருந்து வந்ததற்குச் சரியான ஆதாரங்கள் இல.[2]
>
> இந்துக்களின் மொழி மிகவும் தெளிவானது. நல்ல வளர்ச்சியடைந்தது. ஆகையால் இந்துக்களுக்குத் தனி எழுத்துமுறை இல்லாமல் வெளிநாட்டிலிருந்து கடன் வாங்கினர் என்று கூறுவது தவறு.

---

1. The Alphabet, Issac Taylor, Vol. I p. 345
2. Dawsan Johan, The Invention of The Indian Alphabet J.R.A.S. (New Series) Vol. XIII, 1881, p. 112

அசோகர் காலத்திய பிராமி எழுத்துகளால் சமஸ்கிருத மொழியின் சொற்களைச் சரியாக எழுத முடியாது. அதனால் அசோகர் காலத்திற்கு முன்பே ஓர் எழுத்து முறை இந்தியாவில் இருந்திருக்க வேண்டும்.

### வாடல் அவர்களின் கூற்று

சுமார் கி.மு. 4000—ஆண்டு வாக்கில் சுமேரியர்கள் சிந்து நதிச் சமவெளியில் குடியேறித் தங்கள் மொழியையும் எழுத்தையும் புகுத்தினர்.

### எஸ்.ஆர். ராவ் அவர்களின் சிந்தனைகள்

செமிட்டிக் எழுத்துகளுக்கும், பிற்கால ஹாரப்பா எழுத்துகளுக்கும் ஏராளமான ஒற்றுமைகள் உள்ளன.

கி.மு. 10—ஆம் நூற்றாண்டு முதல் கி.மு. 11—ஆம் நூற்றாண்டு வரை ஜெருசலம், பாலஸ்தீனம், சிரியா, தெற்கு அரேபியா ஆகிய பகுதிகளில் பினீசியா, ஹீப்ரு, அராமிக், தென் அரேபியா மொழிகள் முதலியவற்றைப் பேசிய மக்கள் செமிட்டிக் எழுத்து முறையில் ஒரு வகை எழுத்துகளைப் பயன்படுத்தினர். அந்த எழுத்து முறையில் 23 வகையான அடிப்படை எழுத்துகள் பயன்படுத்தப்பட்டன. அந்த எழுத்திற்கும், ஹாரப்பா, பிற்கால ஹாரப்பா எழுத்து முறைகளுக்கும் பெரிய ஒற்றுமை உள்ளது.[1]

### ஜார்ஜ் பூலர், வெப்பர் ஆகியோருடைய முடிவுகள்

வடக்கு செமிட்டிக் எழுத்திற்கும் ஹாரப்பா எழுத்திற்கும் தொடர்பு இருக்கிறது. அதேபோல், வடக்கு செமிட்டிக் (பினீசியர்) எழுத்திற்கும், பிராமி எழுத்திற்கும் தொடர்பு உள்ளது. பினீசியர்களின் எழுத்திற்கும், பிராமி எழுத்துகளின் பழைய வடிவங்களுக்கும் அதிகமான ஒற்றுமை இருக்கிறது.

திரு பூலர் அவர்கள் பிராமி எழுத்தின் வடிவங்களில் இருபத்து மூன்று எழுத்துகள் வடக்கு செமிட்டிக் எழுத்துகளிலிருந்தும், ஒரு சில 'மீசா'க் கல்வெட்டுகளிலிருந்தும் மற்றும் ஐந்து எழுத்துகள் அஸிரிய நாட்டு எடைக்கற்களிலிருந்து தேர்வு செய்து ஒற்றுமைப் படுத்திக் காட்டியுள்ளார்.[2]

---

1. S.R. Rao, Was the Indus Script Phonetic, Science Today, March 1982.
2. George Buhler, Indian Paleography Plate I No.8

## ஹாரப்பா எழுத்துகளும் பிராமியும்

நெடுங்காலமாக...

சிந்து சமவெளி நாகரிகத்தைச் சார்ந்த ஹாரப்பா மக்களுக்கும் மத்திய தரைக்கடலைச் சார்ந்த மக்களுக்கும் தொடர்பு இருந்ததாகக் கூறப்படுகிறது.

ஹாரப்பா பகுதியில் வழக்கத்திலிருந்த முத்திரைகளும் கைவினைப் பொருள்களும் பண்டைய சுமேரிய நகரங்களின் புதைபொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அந்த அகழ்வு ஆய்வினால் இந்தியாவுக்கும் மெசப்படோமியாவுக் கும் வாணிகத் தொடர்பு இருந்து வந்தது உறுதியாகியுள்ளது.

அக்காலத்தில் கட்டிடத்திற்குத் தேவையான மரச் சாமான்களும் பளிங்குக் கற்களும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன.[1]

செமிட்டிக் எழுத்து முறைக்கும் ஹாரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட முத்திரை எழுத்துகளுக்கும் தொடர்பு இருப்பதாகப் பல அறிஞர்கள் நினைக்கிறார்கள்.

## முடிவுரை

பல்வேறு அறிஞர்களின் பல்வேறு மாறுபட்ட கருத்துகளைக் கவனிக்கும்போது, பொதுவான ஓர் உண்மை விளங்குகிறது.

செமிட்டிக் எழுத்துகளுக்கும் அசோகர் பிராமிக்கும் ஒரு தொடர்பு இருப்பதை யாரும் மறுக்கவில்லை. எது தொன்மையானது என்பதில் தான் சில அறிஞர்களிடம் கருத்து வேறுபாடு தோன்றியுள்ளது.

இந்தியாவில் கி.மு. 6—ஆம் நூற்றாண்டிலிருந்து தான் எழுத்துக் கல் வெட்டுகளைக் காணமுடிகிறது. ஆனால் செமிட்டிக் எழுத்துகள் அதற்கு நெடுங்காலத்திற்கு முன்பே இருந்ததற்கான சான்றுகள் உள்ளன என் பதை நாம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

---

1. Dr. Shireen Ratnagar, The Stamp of Civilisation Seals of Harappa, The India Magazine, Feb.1982.

# ஆய்வுக் குறிப்புகள்

# அசோகர் பிராமியும் தமிழ் பிராமியும்

## கல்வெட்டுகளில் எழுத்து முறை

அசோகர், பிராகிருத மொழிக் கல்வெட்டுகளைப் பிராமி எழுத்துகளாலேயே செதுக்கினார். தமிழ் பிராமி எழுத்துமுறை, தமிழ் மொழிக் கல்வெட்டுகளைச் செதுக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டது. தமிழ்க் கல்வெட்டுகளில் பிராகிருதச் சொற்களும் கலந்துள்ளன.

## தமிழ் மொழியின் சிறப்பு எழுத்துக்கள்

தமிழ் பிராமிக்கும் அசோகர் பிராமிக்கும் பொதுவான எழுத்துகள் பல இருந்தாலும், தமிழ் மொழியின் சிறப்புக்குரிய ழ, ள, ற, ன எழுத்துகள் அசோகர் பிராமியில் காணப்படவில்லை. தமிழ் பிராமியைத் தென் அசோகர் பிராமியென்றும் அழைப்பர்.

தமிழ் பிராமியின் தோற்றம் குறித்துப் பல மாறுபட்டக் கருத்துகள் உள்ளன.

அவைகளில் முக்கியமானவற்றை மட்டும் கவனிப்போம்!

## டாக்டர் பூலரின் கருத்து

ஆந்திர மாநிலம், கிருஷ்ணா நதிக்கரையில் பட்டிப்ரோலு என்ற கிராமத்தில் **1892**ம் ஆண்டு சிதையுண்ட புத்தர் நினைவுச் சின்னம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது.

அந்தச் சின்னத்துடன் புதையுண்டு கிடந்த பேழை ஒன்று கிடைத்தது. அப்பேழையின் விளிம்பிலும் பேழையின் மூடியிலும் எழுத்துகள் பொறிககப்பட்டிருந்தன. அந்த எழுத்துமுறை அசோகர் பிராமிக்கு மாறுபட்டதாக இருந்தது. அதனால் இதற்குப் 'பட்டிப்ரோலு எழுத்து முறை' என்று பெயர் சூட்டினர்.

அந்த எழுத்துகளைப் படித்த டாக்டர் பூலர், அந்த எழுத்துமுறை அசோகர் காலத்திலோ, அதற்கும் முன்போ தோன்றியிருக்க வேண்டு மென்று தம் கருத்தைத் தெரிவித்தார்.

டாக்டர் பூலர் அந்த எழுத்துமுறையின் காலம் கி.மு. 3—ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருத்துத் தெரிவித்தார். மேலும் அந்த எழுத்து வகையைக் கருத்தில் கொண்டு, அக்காலக் கட்டத்தில் பல வளர்ச்சியடைந்த 'தென் பிராமி எழுத்து வகைகள்' வழக்கில் இருந்திருக்க வேண்டுமென்று கருதினார்.

அந்த எழுத்துவகை திடீரென்று தோன்றியிருக்க முடியாதென்றும் அவ்வ நெடுங்காலமாக வழக்கில் இருந்திருக்க வேண்டுமென்றும் தம் கருத்தைத் தெரிவித்தார்.

மவுரிய மன்னர்கள் ஆட்சிக் காலத்தில்தான் இந்திய நாட்டில் எழுத்துமுறை பரவியது என்ற கூற்று தவறானது என்றும் டாக்டர் பூலர்



பட்டிப் ரோலுவில் கிடைத்த
எழுத்துள்ள பேழையின் மூடி



பேழையின் விளிம்பு

கருதுகிறார். அந்த எழுத்து முறைக்கும் செட்டிக் எழுத்து முறைக்கும் தொடர்பு இருப்பதாகவும் கூறினார்.[1]

### கே. ஜி. கிருஷ்ணன் கருத்து

தமிழ் பிராமி எழுத்தும், அசோகர் பிராமி எழுத்தும் பொதுவான. வேறு ஓர் எழுத்திலிருந்து தோன்றியிருக்க வேண்டும்.

தமிழ பிராமியின் மகர வடிவம் அசோகர் பிராமியின் மகர வடிவம் போல் இல்லை. இந்த மகர வடிவம் ஸ்ரீலங்காவில் உள்ள ரிதிகலா



அசோகர் பிராமி - மகர வடிவம்



தமிழ் - பிராமி - மகர வடிவம்

கல்வெட்டில் காணப்படுகிறது. அங்கு அந்த எழுத்தை பிராகிருத மொழி எழுதப் பயன்படுத்தினர். இதன் காரணமாக இந்த வடிவம் தமிழகத்திலிருந்து ஸ்ரீலங்காவிற்குச் சென்றிருக்க வேண்டும் என்று அவர் குறிப்பிடுகிறார்.[2]

இந்த எழுத்துமுறை அசோகர் காலத்திற்கு முன்பே தோன்றியிருக்க வேண்டும்.

### ஐராவதம் மகாதேவனின் கருத்து

1. மூன்று விதமான பிராமி எழுத்து வகைகள் வழக்கில் இருந்திருக்கின்றன. அசோகர் காலத்திய தமிழகத்தின் எல்லைக்கு அப்பால் மவுரியர்களின் பிராமி எழுத்துமுறை வழக்கில் இருந்தது. (இதை அசோகர் பிராமி என்று பெரும்பாலான தொல் எழுத்து அறிஞர்கள் அழைக்கின்றனர் — ஆர்.)

   தமிழ் நாட்டில் தமிழ் பிராமி வழக்கில் இருந்தது. (தமிழ் பிராமியை தென் அசோகர் பிராமி என்றும் அழைக்கின்றனர் — ஆர்) ஸ்ரீலங்காவில், ஸ்ரீலங்கா பிராமி வழக்கில் இருந்தது. இவற்றுக்கெல்லாம் அடிப்படை மவுரிய பிராமிதான். தமிழ் பிராமியும், ஸ்ரீலங்கா பிராமியும் வட்டார மொழி வேறுபாடுகளுக்கு ஏற்ப மாற்றம் ஏற்பட்டு வழக்கில் வந்திருக்கின்றன.

2. தமிழ் அல்லாத மொழிகளுக்கும், தமிழ் மொழிக்கும் பொதுவான ஒலி வகைகள் உள்ளன. தமிழ் பிராமிக்கும், மவுரிய பிராமிக்கும் பொதுவான எழுத்து வடிவங்கள் உள்ளன.

3. மவுரிய பிராமியிலுள்ள எல்லா எழுத்துகளும் தமிழுக்குத் தேவையில்லை. தமிழ் மொழிக்குத் தேவையில்லாத எழுத்துகளை ஒதுக்கி

---

1. The Bhattiprolu Inscription, by G. Buhler Epigraphia Indica Vol. II page 323.
2. Origin and Development of Tamil Script - Studies in South Indian History and Epigraphy by K.G. Krishnan, p. 93.

விட்டுத் தேவையான எழுத்துகளை மட்டும் பயன்படுத்தப்பட்டது.

4. தமிழ் மொழிக்குச் சிறப்புடைய எழுத்துகள் என்று கருதப்படும் ழ, ள, ற, ன ஆகிய நான்கு எழுத்து வடிவங்களும் மவுரிய பிராமி எழுத்திலிருந்து சில மாறுதல்களுடன் தோன்றியவை என்பதை எளிதாக விளக்கலாம்.[1]

5. ஏகாரம், ஓகாரம், ஆகிய நெடில் வடிவங்களே மவுரியர் பிராமியில் உள்ளன. 'எ'கரம், 'ஒ'கரம் கிடையாது. தமிழுக்கு இந்த ஒலியுடைய எழுத்துகள் தேவைப்பட்டதால், ஏகார, ஓகார எழுத்துகளில் புள்ளி வைத்து எகர ஒகரமாக எழுதினார்கள்.

## தமிழ் பிராமி எழுத்து முறை பற்றி ஐராவதம் மகாதேவன்

1. தமிழ் பிராமி எழுத்துமுறை கிறிஸ்து பிறப்பதற்கு முந்நூறு ஆண்டு களுக்கு முன் தமிழகத்தில் வழக்கில் வந்திருக்க வேண்டும். இந்த எழுத்து முறையில் காலப்போக்கில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

2. புதுச்சேரியை அடுத்துள்ள அரிக்கமேட்டில் கிடைத்துள்ள பானை ஓடுகளிலுள்ள எழுத்துகள், அதுவரை ஏற்பட்ட மாறுதல்களுக்கு ஓர் எல்லைக் கோடாக அமைந்திருக்கின்றன.

3. அரிக்கமேடு எழுத்துகளின் காலம் கி.மு. 2—ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 2—ஆம் நூற்றாண்டு வரை அடங்கும்.[2]

## தமிழ் பிராமி எழுத்துக்கள் கிடைத்துள்ள இடங்கள்

தமிழ் பிராமி எழுத்துகள், தமிழ் நாட்டில் குகைத்தளங்களில் மட்டுமல்லாமல், பானை ஓடுகளிலும் கிடைத்துள்ளன.

Māṅkuḷam



மாங்குளம் கல்வெட்டு - குகைத்தளம்.

1. Origin of Tamil Script. Iravatham Mahadevan
Seminar papers - The Institute of Traditional Cultures, University Buildings, Madras-600 005

2. Ibid

புதுச்சேரி மாநிலம் அரிக்கமேட்டில் மார்டிமர் வீலர் செய்த அகழ்வாராய்ச்சியில், தமிழ் பிராமி எழுத்துகள் உள்ள பானை ஓடுகள் கிடைத்துள்ளன.



அரிக்கமேடு — பானை ஓடு

இதே போன்று தமிழ் பிராமி எழுத்துகள் கொண்ட பானை ஓடுகளைத் திருச்சி உறையூர் அகழ்வாராய்ச்சியில் டாக்டர் டி.வி. மகாலிங்கம் கண்டெடுத்துள்ளார்.



**Fig. 6. Inscribed potsherd from Uraiyūr**
*(Adopted from "Early South Indian Palaeograply" University of Madras, 1967)*

உறையூர் பானை ஓட்டின் படம்

இதுவரை கிடைத்துள்ள சான்றுகளின்படி தமிழ் — பிராமி எழுத்துகள்தாம் தமிழ்மொழியின் தொன்மையான எழுத்துவடிவம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

# தமிழ் வட்டெழுத்து

## முன்னுரை

தமிழ் மொழியின் தொன்மை எழுத்து வடிவங்களுள் 'வட்டெழுத்து' மிகவும் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது. இதன் தோற்றம், மென்மேலும் ஆராய்வதற்குரிய வகையில் அமைந்துள்ளது எதனால் என்பது சிந்திக்கத்தக்கதாகும்.

வளைந்த கோடுகளையே அதிகமாகப் பெற்றிருந்ததால், இந்த வகை எழுத்திற்கு 'வட்டெழுத்து', 'வட்டம்' என்ற பெயர்கள் உண்டாயின. சேர நாட்டில் பிற்கால வட்டெழுத்திற்கு 'மலையாண்ம' என்றும் 'கோலெழுத்து' என்றும் பெயர்கள் வழங்கின.

## தோற்றம்

வட்டெழுத்தின் தோற்றம் குறித்து டாக்டர் இரா. நாகசாமி கூறியுள்ள கருத்து இது :

> *அண்மையில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் தமிழ் நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறை பல நடுகற் களைப் படி எடுத்தது. இவை கி.பி. 6—ஆம் நூற்றாண்டி லிருந்து 9—ம் நூற்றாண்டுக்கு உட்பட்ட காலத்தைச் சார்ந் தவை. அவற்றில் பெரும்பாலானவை வட்டெழுத்தில் உள்ளன. கி.பி. 5—ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் காணப்படும் இரு நடுகற்கள் தர்மபுரி மாவட்டம் இருளப் பட்டி என்னும் இடத்தில் கிடைத்தன. இவையும் வட் டெழுத்தில் உள்ளன.*
>
> *அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகள் பண்டைத் தமிழி எழுத்தில் இருந்துதான் வட்டெழுத்து வளர்ந்தது என்பதைத் தெளிவாகக் குறிக்கின்றன. (தமிழ் பிராமிதான் தமிழி என்று திரு. நாகசாமி கூறுகிறார் — ஆர்) ஆதலின், வட்டெழுத்தின் வளர்ச்சியைக் குறித்து இனி அய்யப்பாட்டுக்கே இடமில்லை. தமிழி எழுத்துகள் வட்டெழுத்தாக மலர்வதை ஒவ்வொரு எழுத்திலும் காட்ட லாம். இதுகாறும் வட்டெழுத்தில் காலத்தில் முற்பட்ட தாகக் கருதப்பட்டது, செஞ்சியின் அருகில் திருநாதர் குன்று என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டாகும். இது கி.பி. 5—ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்பட் டது. ஆனால், அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட கல் வெட்டுகள் இதைக் காட்டிலும் தொன்மை ஆனவை. இவற்றில் பலவற்றைக் கவனித்தால், இவை தனி வட் டெழுத்தில் எழுதப்படவில்லை என்பதும் வட்டெழுத்தும் தமிழியும் கலந்தே எழுதப்பட்டுள்ளன என்பதும் தெளி வாகிறது. இதன் அடிப்படையில் காணும்போது அரச்ச லூரிலுள்ள கல்வெட்டு இரு எழுத்துக்களின் தொடக்*

கத்தையும் காட்டுகிறது. இரண்டும் ஒரே கல்வெட்டில் கலந்து எழுதப்பட்டுள்ளதையும் இங்கு காண்கிறோம். ஆதலின் வட்டெழுத்து 3—ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழகத்தின் வழக்கில் வந்தது என்று கூறலாம்.[1]

வட்டெழுத்தின் தோற்றம் குறித்து அறிஞர்களிடையே சில மாறுபட்ட கருத்துகள் உள்ளன. அவற்றுகள் முக்கியமானவற்றை மட்டும் கவனிப்போம்.

இந்திய தொல் எழுத்து அறிஞர்களில் சிறப்புடையவர் என்று கருதப் படும் டாக்டர் பர்னல் அவர்கள் வட்டெழுத்தின் தோற்றம் குறித்துக் குறிப்பிடுகையில் 'பினீசிய வர்த்தகர்கள் மூலம், தென் இந்தியாவிற்கு செமிட்டிக் எழுத்து முறை வந்திருக்க வேண்டும், செமிட்டிக் எழுத்து வகை ஒன்றிலிருந்து வட்டெழுத்து தோன்றியிருக்க வேண்டும். தொன்மைக் காலத்திலிருந்தே, தென் இந்தியர்களுடன் வர்த்தகத் தொடர்பு இருந்ததற்கு ஆதாரங்கள் உண்டு' என்று கூறுகிறார்.[2]

வட்டெழுத்து ஆய்வில் சிறப்புப் பெற்றவரான டி.ஏ. கோபிநாத ராவ் கீழ்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

'அசோகர் காலத்திய எழுத்து வடிவங்களில் பிராமி எழுத்துப் பிரிவில் இருந்து உதித்த நகரி, தமிழ், கிரந்தம், தெலுங்கு, கன்னடி எழுத்து வடிவங்கள் போல் வட்டெழுத்தும் அதிலிருந்தே தோன்றி யிருக்க வேண்டும். ஆனால் அதன் பரிணாம வளர்ச்சி தனிப்பட்ட முறையில் அமைந்திருக்கிறது.[3]

தமிழ் — பிராமி (தமிழி) எழுத்திலிருந்துதான் வட்டெழுத்து தோன்றியதாகப் பெரும்பான்மையான தொல் எழுத்து அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் அந்த எழுத்து எந்தக் கால—கட்டத்தில் தனித் தன்மை பெறத் தொடங்கியது என்பது குறித்துத்தான் மாறுபட்டக் கருத்துக்கள் உள்ளன.

## வரலாற்றின் முந்தைய முடிவு

'தமிழ் வட்டெழுத்து கி.பி. 3—ம் நூற்றாண்டில் தமிழ் பிராமியி லிருந்து பிரியத் தொடங்கி கி.பி. 6—ஆம் நூற்றாண்டில் தனித் தன்மையைப் பெற்றிருக்கலாம்' என்று நான் 'சேர நாட்டில் தமிழ் வட்டெழுத்து' என்ற எனது நூலில் கூறியுள்ளேன்.[4]

---

1. கல்வெட்டியல்
2. Elements of paleography — (4th to 7th C) by A.C. Burnell.
3. Travancare Archeological Series — Vol I
   Gopinatha Rao T.A.
4. சேர நாட்டில் தமிழ் வட்டெழுத்து, பக்கம் 36

## வட்டெழுத்து வரலாற்றில்
## சிந்தனைக்குரிய
## புதிய ஆய்வு....புதிய முடிவு!

**அண்மைக்கால ஆராய்ச்சிக்குப்பின் தமிழ் வட்டெழுத்து கி.பி. 3—ஆம் நூற்றாண்டுக்கு முன்பே தோன்றியிருக்கவேண்டுமென்று கருதுகிறேன். அந்த முடிவிற்குப் பல இன்றியமையாத எடுத்துக்காட்டுகள் உள்ளன.**

தமிழகத்தில், கி.பி. 3—ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 5—ஆம் நூற்றாண்டு வரையுள்ள, நன்கு வளர்ச்சி அடைந்த வட்டெழுத்து வடிவங்கள் அடங்கிய தமிழ் — பிராமிக் கல்வெட்டுகள் உள்ளன.

தமிழ் பிராமி எழுத்து படிப்படியாக வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டால் இந்தக் காலகட்டத்திலுள்ள வட்டெழுத்து வடிவங்கள் இந்த வளர்ச்சியடைந்த தோற்றத்தில் இருக்க முடியாது. அரைகுறையாக வளர்ச்சியடைந்த வடிவமே அமைந்திருக்க முடியும். அதற்கான சான்றுகளைக் காணலாம்.

### 1. பூலாங்குறிச்சிக் கல்வெட்டு

இராமநாதபுரம் மாவட்டம் பொன்னமராவதி அருகே உள்ள பூலாங்குறிச்சிக் கிராமத்தில் தமிழ் நாட்டுத் தொல்பொருள் ஆய்வுத் துறை சமீபத்தில் தமிழ் — பிராமிக் கல்வெட்டு ஒன்றைக் கண்டு பிடித்தது. இது கி.பி. 3—ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று டாக்டர் இரா. நாகசாமி கூறுகிறார். இதில் மூன்று வட்டெழுத்து வடிவங்கள் தெளிவாக உள்ளன.



A part of the inscription referring to Brahmadaya lands Pandinadu Kongunadu etc. Note the use of dots for denoting consonants and short 'e' 'o' etc

பூலாங்குறிச்சிக கல்வெட்டு—கண் பிரதி

கி.பி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்துதான் வட்டெழுத்து படிப்படியாக வளர்ச்சியடைந்தது என நாம் கருதினால் மேலே குறிப்பிட

டுள்ள தமிழ் — பிராமிக் கல்வெட்டில் இவ்வளவு தெளிவாக வட்டெழுத்து வடிவங்களை நாம் காண வாய்ப்பில்லை.

## 2. ஆண்டிப்பட்டிப் புதையல்

15 ஆண்டுகளுக்கு முன்னர் வட ஆர்க்காடு மாவட்டம் செங்கம் வட்டம் ஆண்டிப்பட்டிக் கிராமத்தில் ஈய நாணயங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. அவை தற்போது சென்னை அரும்பொருட்காட்சிச் சாலையில் உள்ளன. டாக்டர் இரா. நாகசாமியின் கூற்றுப்படி இந்த நாணயங்கள் அனைத்தும் ஒரே மாதிரியானவை என்றும் எல்லா நாணயங்களிலும் ஒரு பக்கத்தில் தமிழ் மொழிச் செய்தி அடங்கியுள்ளதென்றும் இச்செய்தி ஆரம்ப காலத் தமிழ் — பிராமி எழுத்தினால் எழுதப்பட்டுள்ளது. என்றும் அறிய முடிகிறது.

இந்த நாணயத்தில் 'எ' என்ற எழுத்து என்ற வடிவத்தில் காணப் படுகிறது. இதன் மத்தியில் புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இது,

'எகர ஒகரத்தியற கையு மற்றே'

என்ற தொல்காப்பியச் சூத்திரத்தைப் பொருந்தியுள்ளது.

இந்த நாணயத்தின் காலம் கி.பி. 2 அல்லது 3—ஆம் நூற்றாண்டு என டாக்டர் இரா. நாகசாமி கருதுகிறார்.



இந்த வடிவ்ம் வட்டெழுத்தின் சாயலில் உள்ளது.

ஆண்டிப்பட்டி புதையல் நாணயம்

## 3. அரச்சலூர்க் கல்வெட்டு

அரச்சலூர்க் கல்வெட்டில் கீழ்க்கண்ட வட்டெழுத்துகளை நாம் காண்கிறோம்.



Araccalūr



அரச்சலூர்க் கல்வெட்டு

இக்கல்வெட்டில் பெரும்பாலும் தமிழ் — பிராமி எழுத்துகளே உள்ளன. இடை இடையே காணப்படும் வட்டெழுத்துகள் வளர்ச்சி அடைந்தவை.

இக்கல்வெட்டு கி.பி. 3—ஆம் நூற்றாண்டு முதல் 6—ஆம் நூற்றாண்டுக் கிடையிலான காலத்தைச் சேர்ந்தது என்று திரு ஐ. மகாதேவன் கூறுகிறார். இது கி.பி. 4—ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என்று திரு டி.வி. மகாலிங்கம் கூறுகிறார்.

## 4. பிள்ளையார்ப்பட்டிக் கல்வெட்டு

பிள்ளையார்ப்பட்டியில் உள்ள கல்வெட்டில் கீழ்க்கண்ட வட்டெழுத்துகளை நாம் காண்கிறோம்.

எ —
ன —



**Piḷḷayārpaṭṭi**



பிள்ளையார்ப்பட்டிக் கல்வெட்டு

இக்கல்வெட்டில் தமிழ் — பிராமி எழுத்துகளிடையே வட்டெழுத்துகள் காணப்படுகின்றன.

இக்கல்வெட்டின் காலம் கி.பி. 3—ஆம் நூற்றாண்டு முதல் 6—ஆம் நூற்றாண்டுக்கு இடையிலான காலத்தைச் சார்ந்தது என்று திரு ஐ. மகாதேவன் கருதுகிறார். இது கி.பி. 4—ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக திரு டி.வி. மகாலிங்கம் கூறுகிறார்.

## 5. திருநாதர்க்குன்று கல்வெட்டு

TIRUNATHAR-KUNRU INSCRIPTION



| | |
|---|---|
| Aimbatt-ēḻ-aṉa— | ஐம்பத்தேழன- |
| Śaṉannōṟṟa | சனந்நோற்ற |
| Śandiranandi Ā— | சந்திரநந்தி ஆ |
| Śirigar nisidikai | சிரிகர் நிசிதிகை |

தமிழகத்தின் மிகப்பழமையான கல்வெட்டு தென்னார்க்காடு மாவட்டம் செஞ்சியை அடுத்த திருநாதர்க்குன்று கல்வெட்டே என்று அண்மைக் காலம் வரை கருதப்பட்டு வந்தது. இது கி.பி 5—ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று ஒரு சில அறிஞர்களும், 6—ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று வேறு சில அறிஞர்களும் கருதுகின்றனர். பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் உள்ளது போன்று இக்கல்வெட்டிலும் தமிழ் — பிராமி எழுத்துகளுடன் வட்டெழுத்துகளும் கலந்து காணப் பெறுகின்றன.

அவை :



## முடிவுரை

மேலே கூறப்பட்டுள்ள சான்றுகளிலிருந்து, கி.பி. மூன்றாம் நூற்றாண்டு, நான்காம் நூற்றாண்டு, ஐந்தாம் நூற்றாண்டு ஆகிய காலங்களில் உள்ள கல்வெட்டுகளில், தமிழ் — பிராமி எழுத்துகளிடையே வளர்ச்சியடைந்துள்ள வட்டெழுத்து வடிவங்களையும் காண்கிறோம்.

எனவே வட்டெழுத்துகள் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன்னரே தோன்றியிருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு.

ஆய்வுக் குறிப்புகள்

# வட்டெழுத்தின் வளர்ச்சி

## தோற்றம்

வட்டெழுத்தின் வளர்ச்சியைக் குறித்து ஆராயும்போது அக்காலத்தில் தமிழகத்தின் அரசியல் நிலைமையைக் குறித்துக் கவனிக்க வேண்டும்.

கி.பி. 6—ஆம் நூற்றாண்டின் பிற்காலத்தில் களப்பிரரை வென்ற பாண்டியர்கள் தங்கள் ஆட்சியை மீண்டும் பாண்டிய நாட்டில் நிலை பெறச் செய்தனர். ஆட்சியைப் பிடித்த பாண்டியர் தங்கள் பேரரசைக் கொங்கு நாட்டின் வடபகுதி வரை பரப்பினர். இவர்களது ஆட்சிக் காலம் சுமார் கி.பி. 550 முதல் 970 வரை நீடித்தது. கடுங்கோன் அரசு பாண்டிய முதற்பேரரசு என்று சரித்திர ஆசிரியர்கள் கூறுவர்.

ஏறக்குறைய இதே காலத்தில் தொண்டை நாட்டில் பல்லவ மன்னர்கள் ஆட்சிக்கு வந்தனர். இவர்களது ஆட்சி ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகள் நிலைபெற்று ஒன்பதாம் நூற்றாண்டு பிற்பகுதியில் வீழ்ச்சியுற்றது.

கி.பி. 6—ஆம் நூற்றாண்டிலிருந்து 9—ஆம் நூற்றாண்டு வரை பாண்டியர் ஆண்ட பகுதிகளிலும், வடஆற்காடு மாவட்டத்தின் மேற்குப் பகுதிகளிலும் வட்டெழுத்து வழக்கில் இருந்திருக்கிறது.

சேர நாட்டில் கி.பி. 9—ஆம் நூற்றாண்டிலிருந்து வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கிடைப்பதாக திரு கே.வி. சுப்பிரமணிய அய்யர் கூறுகிறார்.

## வட்டெழுத்தில் பாண்டியர் பங்கு

தமிழ் நாட்டில் பாண்டிய நாடுதான் செந்தமிழ் நாடு என்று சிறப்பித்துப் பேசப்படுகிறது.

"தண்ணார் தமிழ் அளிக்கும் தண் பாண்டிய நாடு" என்பது மாணிக்க வாசகர் வாக்கு. சங்கம் நிறுவி தமிழ் வளர்த்தவர், பாண்டியர் தமிழினை வளர்த்த பாண்டியர் வட்டெழுத்தையும் வளர்த்தனர்.

பாண்டியர் ஆட்சிக் காலத்தில் வட்டெழுத்தே அரசு அங்கீகாரம் பெற்ற எழுத்து முறையாக இருந்திருக்கிறது. பாண்டிய நாட்டில் 7—ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழ்—பிராமி எழுத்துகள் கலவாத வட்டெழுத்துக் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.

8; 9—ஆம் நூற்றாண்டுப் பாண்டியர் காலத்திய செப்பேடுகள் அனைத்தும் வட்டெழுத்தில் உள்ளன. செப்பேடுகள் அரசனால் அளிக்கப் படுபவை. இதனால் வட்டெழுத்து பாண்டியர் அவையில் சிறப்புற்றிருந்ததை உணர்கிறோம். பாண்டிய நாட்டில் கி.பி. 1000 வரை வட்டெழுத்தில் சாசனங்கள் எழுதப்பட்டு உள்ளன.

## சேர நாட்டில் வட்டெழுத்து

சேர நாட்டில் வட்டெழுத்து மேலும் பல நூற்றாண்டுகள் வழக்கில் இருந்திருக்கிறது. காலம் செல்லச் செல்ல அவை ஒழுங்கு இல்லாமல்

எழுதப்பட்டு, பல மாறுதல்களைப் பெற்றன. இவ்வாறு மாறுதல் அடைந்த வட்டெழுத்தைத் திருவிதாங்கூர் பகுதிகளில் '**மலையாண்ம**' என்றும், கேரளத்தின் வட பகுதிகளில் 'கோலெழுத்து' என்றும் அழைத்தனர்.

## கொங்கு நாட்டிலும் வட்டெழுத்து

கொங்கு நாட்டில் ஏறக்குறைய கி.பி. 1080 வரையிலும் அந்நாட்டு மன்னர்களின் சாஸனங்கள் வட்டெழுத்தில் காணப்படுகின்றன. கொங்குமன்னர்கள் சேர மன்னர்களின் கிளை வழியினராகக் கருதப்படுபவர்கள்.

கி.பி. 1080 வரை கொங்கு நாட்டை ஆண்ட அரசர்கள் வீர சோழ கலிமூர்க்கன் மற்றும் கலிமூர்க்க விக்கிரம சோழன், விக்கிரம சோழ அபிமானன், அபிமான சோழ ராஜாதி ராஜன் ஆகியோர் ஆவர்.

அவர்கள் காலத்தில் கொங்கு நாட்டில் வட்டெழுத்து வழக்கில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

வட்டெழுத்தின் வளர்ச்சியைப் பாண்டியர்களே பெரிதும் ஊக்குவித்திருக்கின்றனர். சேரர்களும் அதை பெருமளவில் ஆதரிக்கின்றனர்.

## வட்டெழுத்து காணப்படும் இடங்கள்

வட்டெழுத்து, தமிழகத்தில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராம்நாதபுரம், மதுரை, கோவை, சேலம், தர்மபுரி, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய பகுதிகளிலும், செங்கற்பட்டு மாவட்டத்தில் சில பகுதிகளிலும் வழக்கில் இருந்திருக்கிறது.

சோழ நாட்டின் பகுதியான திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் வழக்கில் இருந்ததில்லை. மேலும், தமிழ் நாட்டில் மட்டுமல்லாமல், கர்நாடக மாநிலத்தின் கோலார் பகுதி வரையிலும், இவ்வட்டெழுத்து நடுகற்கள் கிடைத்து உள்ளன.

## கடல் கடந்து
## மாலத் தீவில் வழங்கிய வட்டெழுத்து

இலங்கைக்குத் தென் மேற்கு சுமார் ஐநூறு மைல் தொலைவில் உள்ளது மாலத்தீவு. அங்கும் கடல் கடந்தும் தமிழ்வட்டெழுத்து பரவி இருந்தது என்பதற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. மாலத்தீவில் வழங்கிய எழுத்துமுறையைக் குறித்து திரு ஐசக் டெய்லர் கூறுவதாவது :

> மாலத் தீவில் வழங்கிய எழுத்துமுறை ''தெவ்ஹி ஹக்குரா'' என்று பெயரிட்டு அழைக்கப் பெற்றது. அந்த எழுத்துகள் இந்திய எழுத்துகளைப் போன்று இடமிருந்து வலம் நோக்கி எழுதப்பெற்றன. அந்த எழுத்துமுறைகளுக்கும், கன்னடம், துளு போன்ற எழுத்துமுறைகளுக்கும் தொடர்பு இருப்பதாக மொழியியலாளர்கள் கருதுகின்றனர்.[1]

1. Issac Tavlor, 'The Alphabet' Vol II Page 357



மாலத்தீவு பழைய எழுத்து
பாண்டிய நாட்டு வட்டெழுத்து
டெ
ண
த
து
ந
நி
போ
வ
ய
ற
சேர நாட்டுத் தமிழ் வட்டெழுத்து
ள

திரு ஐசக் டெய்லர், தமது நூலில் மாலத்தீவு எழுத்துகளின் வரி வடிவத்தைக் கொடுத்துள்ளார்கள். அவற்றைப் பார்த்தபோது அந்த எழுத்துகள் வட்டெழுத்துடன் ஒத்திருப்பதை உணர்ந்தேன். அந்த எழுத்துகளை, அவர்கள் படித்துள்ளதைவிட மாறுபட்ட முறையில் சில எழுத்துகளைப் படித்து, அவற்றிற்கு ஏற்ற பாண்டிய நாட்டு வட்டெழுத்துகளைக் கொடுத்துள்ளேன்.

மாலத்தீவு தற்போது வழங்கிவரும் எழுத்துகள் இஸ்லாமியர்களால் புகுத்தப் பெற்றதாக எண்ணலாகிறது.[1]

## சோழர் ஆட்சியும் வட்டெழுத்து வீழ்ச்சியும்

பாண்டிய நாட்டில் மிகச் செல்வாக்குடன் திகழ்ந்த வட்டெழுத்து பாண்டிய நாட்டைச் சோழர்கள் கைப்பற்றிய பிறகு வீழ்ச்சியடையத் தொடங்கியது.

பிற்காலச் சோழர் குலத்தைச் சார்ந்த முதலாம் பராந்தகச் சோழன் பாண்டிய நாட்டை கி.பி. 910–ஆம் ஆண்டிற்குப் பிறகு கைப்பற்றிய தாகக் கருதப்படுகிறது. அவன் தன்னை 'மதுரை கொண்ட பரகேசரி' என்று கூறிக்கொள்கிறான். அவன் காலத்திலிருந்து சோழர் ஆதிக்கம், பாண்டிய நாட்டில் பரவத் தொடங்கியது.

இராசராசன் காலத்தில் பாண்டிய நாடு முழுமையும் சோழர் ஆதிக் கத்தின் கீழ் வந்தது. சோழர்கள், பாண்டிய நாட்டில் சிறிது காலம் வட்டெழுத்தையே பயன்படுத்தினார். ஆனால் அவர்கள் வட்டெழுத்தை ஆதரிக்காததால், வட்டெழுத்தின் மதிப்புக் குறையத் தொடங்கியது. கி.பி. 12—ஆம் நூற்றாண்டில் பாண்டியர் பகுதியிலிருந்து வட்டெழுத்து மறைந்து விட்டதாகக் கருதப்படுகிறது.

## திருக்குற்றாலம் தரும் செய்தி

சுமார் கி.பி. 1387—ஆம் ஆண்டில் பராக்கிரம பாண்டியத் தேவர் திருக்குற்றாலநாத சுவாமி திருக்கோயிலின் கருப்பக் கிரகத்தைப் புதுப் பித்தார். அப்போது அதன் சுவர்களில் இருந்த சாஸனங்களைத் தனியாகப் பெயர்த்து எழுதிக்கொண்டு, கட்டிடம் முடிந்தபின் மறுபடியும் அந்த சாஸனங்களைச் செதுக்கியுள்ளார். பழைய சுவரிலுள்ள கல்வெட்டு ஒன்று வட்டெழுத்தாக இருந்ததால் ஒருவரும் படிக்க முடியாததால் அதை மட்டும் விட்டு விட்டதாகவும் கல்வெட்டில் எழுதி வைக்கப் பட்டுள்ளமை மிகவும் சிந்திக்கத்தக்கது.

இதே காலக்கட்டத்தில், சேர நாட்டின் மீது சோழர்கள் படையெடுத்து சில காலம் தங்கள் ஆளுகைக்குள் வைத்திருந்தனர்.

ஆனால் கி.பி. 1070—ஆம் ஆண்டு சோழர்களிடமிருந்து சேரமன்னன் இராமவர்மகுலசேகரன் சேர நாட்டை மீட்டதாகச் சரித்திரம் கூறுகிறது. இதனால் சேர நாட்டில் வட்டெழுத்து அழிவுறாமல் தொடர்ந்து வழக்கில் இருந்து வந்தது.

---

1. Issac Taylor, 'The Alphabet' Vol II Page 378

## ஒரு முக்கிய கருத்தும் முடிவுரையும்

வட்டெழுத்து பல சிறப்பு அம்சங்கள் பொருந்தியது.

பாண்டிய சேர நாடுகளுக்கு இடையில் உள்ள தொடர்பை இலக்கியங்கள் மட்டும் அல்லாமல், தமிழ் வட்டெழுத்தின் வரலாறும் புதிய பாலம் அமைத்துக்காட்டுகிறது. வட்டெழுத்துகள் மூலம் தமிழ் வரி வடிவத்தின் வளர்ச்சியையும், தமிழகம் தழுவிய பல வரலாற்று உண்மைகளையும் நாம் அறிகிறோம்.

# தமிழும் மலையாளமும்

## மலையாளத்தின் தொடக்கம்

மலையாளம் என்ற சொல், தொடக்கத்தில் நாட்டின் பெயராக மட்டுமே வழங்கியது.

மொழிக்கு முதலில் 'மலையாண்ம' அல்லது மலையாய்மா' என்ற பெயர் வழங்கி வந்தது.

காலப்போக்கில் மலையாளம் என்ற நாட்டின் பெயரே மொழியின் பெயராகவும் நிலைத்து விட்டது. சிலர் 'மலையாண்ம' என்பதற்கு 'பழைய மலையாள மொழி' என்றும் பொருள் கொள்கின்றனர்.

மலையாள மொழியின் தோற்றம் குறித்துப் பல்வேறு கருத்துகள் அறிஞர்களிடையே நிலவுகின்றன.

'கேரள பாணினியம்' என்ற சிறந்த ஆராய்ச்சி நூலில் திரு இராஜ ராஜவர்மா அவர்கள் தம் கருத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

அவரது கருத்தின் சுருக்கம் :

> **மலைநாடாகிய மலையாளத்தின் பழங்குடி மக்கள் தமிழர்களே! அவர்களது மொழி தமிழாகவே இருந்தது.**
>
> **'செய்யுள் மொழி' என்றும் 'வாய் மொழி' என்றும் உள்ள வேறுபாடு, வழக்கிலுள்ள எல்லா மொழிகளிலும் உள்ளது போன்று தமிழிலும் இருந்தது. செய்யுள் மொழிக்குச் செந்தமிழ் என்றும் நாடோடி மொழிக்குக் 'கொடுந்தமிழ்' என்றும் தமிழ் நூலாசிரியர்கள் பெயரிட்டிருக்கின்றனர். அவ்வாறு அமைந்த பலவகைக் கொடுந் தமிழ்களில் ஒன்று 'மலையாளம்!'**
>
> **தற்கால மலையாளத்தில், வடமொழியின் ஆதிக்கம் நுழைந்து வலுப்பெற்றது. ஆனால் மலையாள மொழிகள் அடிப்படையும் மேற்கூரையும் இன்றும் தமிழாய் ஆனவைதாம்.**

## மணிப்பிரவாள நடை

**வடமொழியின் கலப்பினால், வடமொழியிலிருந்து சொற்களைக் கடன் வாங்கியும் வடமொழி வாக்கியங்களையும் அணிமுறைகளையும் ஏற்றும், சமஸ்கிருதத்திலிருந்து வேற்றுமை உருபுகளையும் வினைமுற்றுகளையும், இடைச் சொற்களையும் தத்தெடுத்துச் சேர்த்தும் 'மணிப்பிரவாளம்' எனப் புதிய வடிவை உண்டாக்கினர்.**

**இவ்வகைக் கலப்பெல்லாம், செய்யுள் மொழியையே பாதித்தது; உலக வழக்கு மொழியைப் பாதித்து விடவில்லை.**

**மணிப்பிரவாள மலையாளத்தில், வடமொழியின் மிகுதியைக் கண்டு மயங்கித் தலைசிறந்த நூலாசிரியர்கள்**

சமஸ்கிருதத்தில் திராவிடம் கலந்து உருவாகிய மொழியே மலையாளமாகும் என்று கருதுகின்றனர். ஆனால், அவ்வாறு கருதுவதற்கு இடமில்லை.

ஏனெனில், மொழியில் வாக்கிய முறை, உருவமைப்பு, மரபுச் சொற்றொடர் ஆகியவை மாறவில்லை.

சமஸ்கிருதத்திலிருந்து சொற்களைக் கடன் வாங்கியது கூட, சில இன்றியமையாத தேவைகளுக்கும் வெறும் ஆடம்பரத்திற்குமேயாகும்.

மக்கள் பேச்சு மொழியில் வழங்கும் சொற்களில், வட மொழிக்கும் திராவிடத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பது சிந்தனைக்குரியது.

## மலையாளம் தமிழின் கிளை மொழி !

## கொடுந்தமிழே, மலையாளம் !

மலையாளம், தமிழிலிருந்து வேறுபட்டுத் தனிமொழி என்ற நிலையை எந்தக் காலத்தில் அடைந்தது என்றும் அதற்கான காரணங்கள் யாவை என்றும் நாம் சிந்தித்தல் வேண்டும்.

எல்லா மொழிகளுக்கும் சுவை வேறுபாடு காரணமாக, வட்டார வேறுபாடுகள் வருவது உண்டு. மலையாளத்திலேயே இப்பொழுது இடைநாட்டு மலையாளம் தவிர, தெற்கத்திய மொழி—வடக்கத்திய மொழி என்றும் இருவகை வேறுபாடுகள் உள்ளன.

### தமிழ் நாட்டிலும்

தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி,
பன்றி அருவா, அதன் வடக்கு—நன்றாய
சீதம் மலைநாடு, புனநாடு, செந்தமிழ்சேர்
தமிழ் பன்னிரு நாட்டெண்.

என்ற பாடலின்படி பன்னிரண்டு நாட்டுப் பிரிவுகள் வழக்கில் இருந்தன.

அந்தப் பகுதிகளில், வட்டார மாறுபாடுகள் மொழி உச்சரிப்பின் அடிப்படையில் எற்பட்டிருந்தன.

அந்நாளில் மதுரையில் வழங்கிய மொழிக்குச் 'செந்தமிழ்' என்றும், மேற்கூறிய பன்னிரண்டு நாடுகளில் வழங்கி வந்த மொழிக்குக் 'கொடுந்தமிழ்' என்றும், தமிழ் நூலாசிரியர்கள் பெயர் கொடுத்திருந்தனர். மேற்கூறிய பன்னிரண்டு நாடுகளில் குட்டம், குடம், கற்கா, வேண், பூழி ஆகிய ஐந்தும் இன்றைய கேரள மாநிலத்தில் உள்ளவை.

இந்த ஐந்து நாடுகளிலும் வழங்கிய கொடுந்தமிழ் மொழியே பின்னர் மலையாளமாக வளர்ந்தது.

## முப்பெருங்காலம்

மலையாள மொழிக்கு மூன்று பெருங்கால நிலைகளைக் கொள்ளலாம்.

கொல்லம் ஆண்டின் தொடக்க காலமாகிய கி.பி. 825—க்குப் பின்னர், மலையாளம் ஒரு சுதந்திர மொழியின் நிலைமையை எய்திற்று.

கொல்லம் ஆண்டிற்கு முன்னுள்ள காலத்தைத் தாயாகிய தமிழின் அல்லது மூலத்திராவிட மொழியின் கருவில் வதிந்திருந்த காலமாகக் கணக்கிட்டால் அக்காலத்தில் தொடக்கத்தில் தோன்றியவைதாம்; பதிற்றுப் பத்து போன்ற சங்ககால நூல்கள் என்பது விளங்கும். அவை கேரளத்தில் வாழ்ந்தவர்களால் இயற்றப்பட்டன.

## கொல்லம் ஆண்டுக்குப் பின்

கேரள மொழி வரலாற்றின் மூன்று பகுதிகள் :

1. முற்கால நிலை—குழந்தை நிலை—கொடுந்தமிழ்க் காலம்—கொல்லம் ஆண்டு 1 முதல் 500 வரை (கி.பி. 825—1325)

2. இடைக்காலநிலை—குமரி நிலை—மலையாண்மைக் காலம்—கொல்லம் ஆண்டு 500—க்குப் பின் (கி.பி. 1325—1625)

3. தற்காலநிலை—யௌவனநிலை—மலையாளக் காலம்—கொல்லம் ஆண்டு 800 முதல் இன்று வரை (கி.பி 1625—முதல் இன்று வரை)

கொடுந்தமிழாய்ப் பிறந்த கேரள மொழி, 500 ஆண்டு காலம் குழந்தைப் பருவத்திற்கு ஒத்த கொடுந்தமிழ் நிலையில் இருந்தது. அதில் பாதிக்கு மேற்பட்ட காலம், குமரிப் பருவமாகிய, 'மலையாண்மை' என்று கூறப்படும் நிலையில் வளர்ந்து வாழ்ந்தது. யௌவனப் பருவத்தில் 'மலையாளம்' என்ற பெயரைப் பெற்றிருக்கிறது.

மலையாளத்தைத் தமிழிலிருந்து வேறுபடுத்திச் சுதந்திர மொழியாக்கி விடுவதற்கு உற்சாகம் தந்தது, சமஸ்கிருதம்.

எனினும், அதற்குக் குழந்தைப் பருவத்தில் அதிக உரிமை பாராட்ட முடியவில்லை. குழந்தையின் காப்பாளப் பதவி தமிழுக்கே இருந்தது. தமிழ் என்ற விகுதி சேர்த்து, கருந்தமிழ் என்ற பெயரே அந்நிலைக்கு வழங்கப்பட்டது.

அதனால்தான் அக்காலத்தில் தமிழோடுள்ள தொடர்பு தேயவும், சமஸ்கிருதத்தோடுள்ள தொடர்பு பெருகவும் செய்தன. அக்காலங்களில் இயற்றப்பட்டுள்ள நூல்கள் மிகக் குறைவாகவே நமக்கு கிடைத்துள்ளன.

பத்திரகாளிப்பாட்டில் சில பகுதிகள், சில பழைய கீர்த்தனங்கள் ஆகியவையெல்லாம் கருந்தமிழ்க் காலப் பகுதியின் தொடக்கத்தில் எழுந்தவை. இராமசரிதம் அதன் இறுதியில் எழுந்த காவியமாக இருக்கலாம்.

'மலையாண்மை' என்ற காலப் பகுதியில் குமரிப் பருவத்திற்கு ஏற்ப உரிமை மீறல் காணப்படுகின்றது. தனக்கிருந்த காப்பாளர் என்ற நிலையை, தமிழ் தானாகவே விட்டுவிடவில்லை. ஆனால் சமஸ்கிருதம் அக் காப்பாளர் நிலை தனக்குத் தானென்று பலாத்காரமாக எடுத்துக் கொள்ளத் தொடங்கியது.

இந்த உரிமை மீறல் நிலையில் இருந்துதான், மணிப் பிரவாளக் கவிதைகள் தோன்றியிருக்க வேண்டும். தமிழ்க் காப்பியங்களின் பிரசாரம் குறைந்து, நாட்டு மொழியின் வேறுபாடு தோன்றத் தோன்ற செந்தமிழின் பொருளை உணர்வது பொது மக்களுக்கு இயலாததாகி விட்டது.

## நெருக்கடியில் பிறந்த 'மணிப்பிரவாளம்'

சமஸ்கிருதத்தின் புதுமையும், பெருமையும் காவிய நயமுணர்வோரைக் கவர்ந்தன. அரசர்களும் நம்பூதிரிகளும் சமஸ்கிருதத்தை ஆதரித்தனர். கொடுந்தமிழாகிய நாட்டு மொழியை ஆதரிக்கவில்லை.

ஆனால், நாட்டு மொழியோடு வேற்று மொழியாகிய சமஸ்கிருதத்திலே கவிதை இயற்றினால் கேட்டு இன்புற ஆட்கள் குறைவாகவே அமைந்தனர். இந்நிலையில் இரண்டும் கலந்த கவிதைக்காக, ஒரு மொழியைச் செயற்கையாக உண்டாக்க வேண்டியதைத் தவிர, வேறு வழியில்லாமல் போய்விட்டது. அந்த நெருக்கடியில் பிறந்ததுதான், மணிப்பிரவாள மொழி.

## சமஸ்கிருதக் கவிஞர்கள் எழுதிய மணிப்பிரவாள நூல்கள்

சமஸ்கிருதக் கவிஞர்களால் மணிப்பிரவாளக் கவிதை இயற்ற முடியும். அதனால் தொடக்கத்தில் மணிப்பிரவாள நூலாசிரியர்களெல்லாரும் நம்பூதிரிகளாய் அமைந்தனர். அவர்கள் சமஸ்கிருத இலக்கணத்தைப் போன்று யாப்பையும் நாட்டு மொழியில் தோற்றுவித்தனர்.

'உண்ணு நீலி சந்தேசம்' 'சந்திரோத்சவம்' 'சம்புகள்' ஆகியவை சமஸ்கிருத யாப்பில் அமைந்த மிகச் சிறந்த நூல்களாகும்.

வடமொழியில் சுலோகத்தை அமைத்து விட்டு அங்கு மிங்கும் ஒன்றிரண்டு மலையாள நாட்டு மொழிச் சொற்களை வழங்கினால் சுலோகம் முழுவதும் மணிப்பிர வாளம் ஆகிவிடும்

## நாட்டு மொழியை ஆதரித்த ஒரே ஒரு மலையாளக் கவிஞர்

இடைக்காலக் கட்டத்திலுள்ள மணிப்பிரவாளக் கவிஞர்களில் 'செலுசேரி' ஒருவர் மாத்திரமே, சமஸ்கிருத வெறியில்லாமல் நாட்டு மொழியை ஆதரித்தார். இக் காலக் கட்டத்தில்தான் 'தச்சொள்ளிப் பாட்டு' முதலிய சில நூல்கள் சமஸ்கிருதத் தொடர்பு சிறிதும் இல்லாமல் எழுந்தன.

இரண்டாவது கட்டமாக, கேரள மொழி பருவம் நிறைந்தது ; தனித்து நிற்கும் ஆற்றல் பெற்றது. அதனால் ஒரு காப்பாளனின் கீழ் அடங்கியிருக்கும் நிலை தானாக நீங்கியது. யௌவனப் பருவத்தை அடைந்த நிலையில் மேல் துணைக்கு வேண்டியவர் காப்பாளர் அல்லர் ; கணவனே ஆவான் !

திராவிடக் குலப் பெண்ணாகிய திருவளர்ச் செல்வி கேரள மொழி, ஆரிய குலத்தின் முதல்வனாகிய சமஸ் கிருத மணமகனைச் சுயம்வரக் கணவனாகப் பெற்று விளங்கினாள். இந்த மங்கல நிகழ்ச்சியை, அல்லது திரு மணத்தை வேண்டியவாறு சிந்தித்து அழகுற நடத்தியவர், துஞ்சத்து ராமாநுஜன் எழுத்தச்சன் என்ற பெரும்புலவர் ஆவார்.

மலையாளப் பெண்ணுக்குப் பழமையான தமிழ் நெடுங்கணக்கு என்னும் சட்டை சிறிதும் மனநிறைவை அளிக்கவில்லை. கேரளத் திருமண மரபில் 'உடை அணி வித்தல்' என்பது முக்கிய சடங்கு.

மொழிகளுக்கு உடையாக விளங்குவது, நெடுங் கணக்கு.

அதனால், மலையாளமொழி சமஸ்கிருதமாகிய ஆரிய எழுத்துகளை இக்காலத்தில் ஏற்றுக் கொண்டது. தமிழ் நெடுங்கணக்கு மாறியதோடு, மலையாளத்தின் புறவேடமும் முழுமையாக வேறுபட்டது.

## திரு எஸ். வையாபுரிப் பிள்ளையின் கருத்து

தமிழிலிருந்து மலையாளம் 10—ஆம் நூற்றாண்டில் பிரியத் தொடங்கியது. தமிழ்மொழி மூன்று நிலைகளையுடையது.

அவை பண்டைத் தமிழ் நிலை, இடைக்காலத்தமிழ் நிலை, தற்காலத்தமிழ் நிலை என்பன.

பண்டைத் தமிழை, சங்க இலக்கியங்களைக் கொண்டும் தொல்காப்பிய இலக்கணங்களைக் கொண்டும் அறியலாம்.

இடைக்காலத் தமிழை தேவாரம், திவ்யப்பிரபந்தம், சிந்தாமணி முதலிய இலக்கியங்களைக் கொண்டும் வீர சோழியம், நன்னூல் முதலிய இலக்கணங்களைக் கொண்டும் அறியலாம்.

தற்காலத் தமிழை நன்னூலுக்குப் பிற்பட்ட இலக்கியங்களைக் கொண்டும் பேச்சு வழக்குத் தமிழைக் கொண்டும் அறிய வேண்டியுள்ளது என்று திரு எஸ்.வையாபுரிப்பிள்ளை கூறுகிறார்.

இந்த மூன்று நிலைகளில் எந்த நிலையுடன் பழைய மலையாள மொழி ஒத்து இருக்கிறது என்பதைப் பற்றிய அவருடைய கருத்து சிந்தனைக்குரியது.

## பிற்காலச் சொற்கள்

பிரான், சிரி, தங்கம் என்ற சொற்களே பண்டைத் தமிழிற் கிடையா.

முதலிரண்டு சொற்கள் இடைக்காலத் தமிழ் இலக்கியங்களில் அருகித் தோன்றி, அக்காலத்தின் இறுதியிலுள்ள இலக்கியங்களில் சற்று மிகுதியாகக் காணப்படுகின்றன.

'தங்கம்' மிகப் பிற்பட்ட சொல். 16—ஆம் நூற்றாண்டில் தோன்றிய சூடாமணி நிகண்டிற்கூட, இச்சொல் காணப்படவில்லை. மலையாளத்தில் 'நளசரிதம்' என்ற நூலில் இச்சொற்கள் வருகின்றன. பொதுப்பட நோக்கினால் மலையாள பழைய இலக்கியங்களில் காணும் சொற்களில் பெரும்பாலனவும், இடைக்காலப் பிற்காலத் தமிழ் இலக்கியங்களில் வந்துள்ளனவேயாகும்.

## சொல் வடிவங்கள்

இல்லம் என்ற சொல், மலையாளத்தில் அதிகமாக வழங்கப்படுகிறது. ஆனால், தமிழில் இது பிற்கால வழக்கு; சங்க காலத்தில் 'இல்' என்றே உள்ளது. 'இல்லடுக்களன்' என்பது புறநானூறு, இல்லம் என்ற சொல்லை அப்பர் வழங்குகிறார். இப்பிற்பட்ட சொல் வழக்கே மலையாளத்தில் காணப்படுவது.

இங்ஙனம் இடைக்காலத்து இறுதியில் தோன்றிய தமிழ்ச்சொல் வடிவங்கள் பழைய மலையாள இலக்கியத்தில் காணப்படுகின்றன.

## ஒலி மாற்றம்

மொழிகளில் மிகவும் பழமையான சொற்கள், 'ஸர்வ நாமங்கள்' என்று சொல்லப்படுகிற மூவிடப் பெயர்களும் ஒன்று முதலிய எண்ணுப் பெயர்களும் ஆம். மூவிடப் பெயர்களில் 'யான்' என்பது தன்மை ஒருமைக்குரிய பண்டைத் தமிழ்; நான் என்பது இடைக்காலத்தே தோன்றி நாளடைவில் வழக்கில் மிகுந்த இன்றையச் சொல்லாகி விட்டது.

இப்படித் திரிந்த தன்மைப் பெயரே, மலையாளத்தில் ராமசரிதத்தில் 'ஞான்' என வருகிறது. நான் என்பது ஒலி மாற்றத்தால் திரிந்து 'ஞான்' என வருதல் இங்கு அறியத் தக்கது. நாலு—ஞாலு; நாலுதல்—ஞாலுதல் முதலிய சொற்களை நோக்குக.

எண்ணுக்குரிய பெயர்களில் ஒன்று என்பது ஒந்நு என மலையாளத்தில் வரும். இது இடைக்காலத்தின் இறுதியில், பேச்சு வழக்குத் தமிழிலிருந்து தோன்றிய வடிவமாகும். இது போன்ற பல சொற்கள் உள்ளன. 'மூந்நு' 'கந்துகாலி' முதலியவற்றைக் கூறுவர்.

இவையாவும் தமிழ்ச் சொற்கள் ஒலிமாறி விளைந்த, மலையாளச் சொற்களே.

## சொல் அமைதி—இடைநிலை

'அறிவிக்கின்றேன்' என்ற சொல்லில் உள்ள 'கின்று' என்னும் இடைநிலை, தொல்காப்பியத்திற் கூறப்பட வில்லை. சங்க இலக்கியங்களிலும் காணப்படவில்லை.

இடைக்காலத்து இறுதியில் உள்ள இலக்கியங்களி லும் 13—ஆம் நூற்றாண்டில் தோன்றிய நன்னூலிலும் காணப்படுகின்றது.

மலையாளத்தில் இவ் வினைச் சொல் 'அறிவிக்கிந் நேன்' என வழங்கப்படுகிறது; ஒன்று—ஒந்நு என வரு தல் போல், 'கின்றேன்' என்பது 'கிந்நே' என வந்தமை யும் வெளிப்படை.

இதனால், இடைக்காலத்து இறுதியிலுள்ள தமிழ் வினைமுற்றின் அமைதியே பழைய மலையாளத்தில் காணப்படுகிறது என்பதை அறியலாம்.

## மொழி நடை

இடைக்கால இறுதியில் மலையாள வாக்கியங்கள் கூர்மையாய் அமைந்து, பேச்சு, வழக்கைப் பெரும் பாலும் ஒட்டிச் செல்கின்றன. கம்பன் செய்யுளையும், ராமசரிதத்தையும் ஒப்பு நோக்கினால், மொழிநடை சரிடத்திலும் ஒத்திருக்கின்றன.

எனவே, இடைக் காலத்தின் இறுதியிலுள்ள எளிய

தமிழ் நடையைச் சார்ந்து தோன்றியதே, பழைய மலையாளப் பாட்டுகளின் நடையென்பது விளங்கும்.

## செய்யுள் அமைதி

மலையாளத்திலுள்ள பழைய நூலாகிய 'ராமசரிதம்' பாட்டு என்ற முறையில் அமைந்ததாகும். இது பிற்காலத் தமிழ் இலக்கியத்தை யொட்டி அமைந்தது என்று உறுதியாகக் கூறலாம்.

ராமசரிதப் பாட்டில் ஈ வண்ணம், ஒரிக்கால், இப்பொழ் முதலிய மலையாளச் சொற்கள் தமிழ் வடிவத்திலேயே உள்ளன.

## சாசன காலம்

தமிழிலிருந்து மலையாளம் வேறுபடத் தொடங்கிய காலத்தை சாசனங்கள் மூலம் ஒருவாறு வரையறுத்தல் கூடும்.

வேறொரு பழைய சாசனம் கவியூரில் உள்ளது. அதன் காலம் கி.பி. 950. இதில் பேச்சு வழக்குத் தமிழும், 'சேந்நன்' முதலிய தமிழொலி மாறிய மலையாள வடிவங்களும் காணப்படுகின்றன.

## நல்ல தமிழில் எழுதிய சேர நாட்டுக் கவிஞர்கள்

இக்காலத்திற்கு முன்பு, ஒலி மாற்றம் முதலிய நேர்ந்தமைக்கு யாதொரு சான்றுமில்லை. நேர்மாறாக இதற்கு முன்புள்ள சேரநாட்டுக் கவிஞாகள் அனைவரும் நல்ல தமிழிலேயே பாடியிருக்கின்றனர்.

குலசேகர ஆழ்வார், சேரமான் பெருமாள் நாயனார், சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் முதலியோரைக் குறிக்கலாம்.

## மலையாள நாட்டில் இன்றும் வழங்கும் சங்ககாலத் தமிழ்ச் சொற்கள்

சங்க காலத்திற்குச் செல்வோமானால் 'பதிற்றுப் பத்து' என்ற தொகை நூலைக் காண்கின்றோம். சங்கச் செய்யுட்களில் வந்துள்ள ஒரு சில செர்ற்கள் இன்றும் மலையாள நாட்டில் வழங்கி வருகின்றன. தமிழ் மொழிக்குரிய வட்டெழுத்துகளே, மலையாள் நாட்டில் பூர்வ காலத்தில் கையாளப்பட்டு வந்தன. அங்குள்ள சாசனங்கள் அனைத்தும், தமிழ் மொழியிலேயே அமைந்துள்ளன.

இவை, தமிழ் மொழியே பண்டைக் காலத்தில் இந்நாட்டில் வழக்கத்திலிருந்தென்பதைப் புலப்படுத்தும். பழைய மலையாளக் கவிஞர்கள் தமது மொழியைத் 'தமிழ்' என்ற பெயரிலேயே அழைக்கின்றனர். இராமப்

பணிக்கன் தமது பிரம்மாண்ட புராண மொழி பெயர்ப்பைக் குறித்து, 'இதா ஞான் தமிழாய்க் கொண்டறியிக்கிந்நேன்' என்று கூறியுள்ளார்.

## மலையாளத்தின் தாய் மொழி, தமிழே!

சொற்கள், சொல் வடிவம், ஒலிமாற்றம், சொற்களின் அமைப்பு, சொற்பொருள் மொழியின் நடை, செய்யுள் அமைதி, சாஸன இலக்கியம், மலையாள நாட்டினர் இயற்றிய பூர்வ இலக்கியங்கள், எழுத்து வரலாறு, மலையாளக் கவிஞர்கள் கருத்து முதலிய பல துறைகளையும் நோக்கினால், இடைக்கால இறுதியில் உள்ள தமிழிலிருந்து கி.பி. 10—ஆம் நூற்றாண்டளவிலே பழைய மலையாள மொழி தோன்றத் தொடங்கியதென்று ஐயமின்றிக் கூறலாம்.

இதனால் தமிழும் மலையாளமும், தாயும் மகளும் என்ற தொடர்புடையன என்பது தெளிவாகும்.

## கேரள கெஸட்டரின் ஆசிரியர் அரூர் இராமச்சந்திரன் நாயர் கருத்து

மலையாள மொழி, எழுத்து மொழியாக கி.பி. 11—ஆம் நூற்றாண்டிலிருந்துதான் வழக்கில் வந்தது. அல் புர்னி என்ற முகமதிய அறிஞர் முகமது கஜினியின் அரசவை அறிஞராகத் திகழ்ந்தவர்.

அவர் 11—ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் மலபாரைப் பற்றிக் கூறுகையில் 'இந்த நாட்டில் வெற்றிலை ஏராளமாகக் கிடைக்கிறது. இந்நாட்டில் வெள்ளி மற்றும் தங்க நாணயங்கள் அதிகம் புழக்கத்தில் இருக்கின்றன. அந்த நாணயங்களை வெளிநாடுகளுக்கு அவர்கள் ஏற்றுமதி செய்வதில்லை. இம்மக்கள் கலப்படமாக ஒரு மொழியைப் பேசுகின்றனர்' என்று எழுதியுள்ளார்.

இதிலிருந்து மலையாள மொழி இக்காலக் கட்டத்தில் பிரிந்து தனிமொழியாகவில்லை என்று எண்ணத் தோன்றுகிறது.

அடுத்தபடியாக 'மார்க்கோப்போலோ' என்ற வரலாற்று ஆசிரியர், கி.பி. 1280—ஆம் ஆண்டு மலபாருக்கு விஜயம் செய்து விட்டு 'மலபார் மக்களுக்குத் தனியாக ஒரு மொழி இருக்கிறது. அவர்களுக்குத் தனி அரசன் உள்ளான். அந்த அரசன் ஒருவருக்கும் கப்பம் செலுத்துவதில்லை' என்று கூறியுள்ளார்.

அண்மைக்கால போர்த்துக்கீசிய ஆசிரியர்கள், மலையாள மொழிக்கு 'மலையர்மா' என்று பெயர் கொடுத்துள்ளனர். இக்கருத்தை எடுத்துக் கொண்டால் மலையாள மொழி இக்காலக் கட்டத்தில் தமிழிலிருந்து பிரிந்து

தனித்தன்மை பெற்றுத் தனி மொழியாகி விட்டது என்பதை உணரலாம்.

கேரளத்தில் கிடைத்துள்ள செப்பேடுகளிலும், கல்வெட்டுகளிலுமுள்ள மொழி செந்தமிழுடன் மிக நெருங்கி இருப்பதை உணரலாம். மலையாளத்திற்குரிய சில சொற்களை, இக்கல்வெட்டில் காண முடிகின்றது. எட்டு, ஒன்பது நூற்றாண்டுகளில் எழுதப்பட்டுள்ள சிரியன் கிறித்துவச் செப்பேடுகளைச் செந்தமிழின் அறிவு இல்லாமல் படிக்க முடியாது.

மலையாள மொழியின் ஆரம்ப காலத்தில் எழுதப்பட்ட 'ராம சரிதம்' பெரும்பாலும் தமிழைப் போன்றே உள்ளது. மேலும் அய்யப்பிள்ள ஆசானின் இராம கிருஷ்ணப்பாட்டு, கண்ணாசப்பணிக்கரின் இராமாயணம், பய்யனூர் பாட்டோலை மற்றும் நம்பூதிரிகளின் யாத்திரைக் களிப்பாட்டுகள் ஆகியவை தமிழை ஒத்தே காணப்படுகின்றன.

'ஆதி காலத்தில் கல்வெட்டுகள், மற்றும் செப்பேடுகளில் வட்டெழுத்தே பயன் படுத்தப்பட்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் வரை, மலையாள மொழியில் தமிழ் எண்களே பயன் படுத்தப்பட்டன. இக்காலங்களைக் கொண்டு மலையாளம் தமிழின் கிளை மொழி என்றே எண்ணத் தோன்றுகிறது. காலக் கிரமத்தில் தமிழின் செல்வாக்குக் குறைந்த போது மலையாளம் வளர்ச்சியடைந்து தனித்தன்மை அடைந்துவிட்டது.

மலையாள மொழியைத் தமிழனாலும் தமிழை மலையாளிகளாலும் சிரமமின்றிப் புரிந்து கொள்ள முடிகின்றது என்பதை வைத்தே இந்த இரு மொழிகளுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை உணர முடியும்.

## பேராசிரியர்
## இளங்குளம் குஞ்சன்பிள்ளை கருத்து

வடமொழியும் செந்தமிழும் கலந்து உருவானதே மலையாளம். நம்பூதிரிகள் கேரளத்திற்கு வரும்போது தமிழே பேசப்பட்டது.

இந்த மொழியின் வளர்ச்சியைக் கல்வெட்டுகளிலிருந்தும், இராம சரிதத்திலிருந்தும் அறியலாம். மலையாள மொழியை முதலில் நம்பூதிரிகளே எழுத முயன்றனர். மலையாள மொழி வளர்ச்சிக்கு அவர்களே காரண கர்த்தாக்களாவர்.

## இந்திய அரசின் ஓய்வுபெற்ற தலைமைக் கல்வெட்டியலாளர் கே.ஜி. கிருஷ்ணன்

பத்தாம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் 'இடைக் காலத் தமிழ்' வழங்கப்படும் தமிழ் மொழியுள்ளது. இந்த இடைக்காலத் தமிழிலிருந்து தான் மலையாள மொழி தோன்றியது.

'கேரளத்திலும் தமிழ் நாட்டிலும் கிடைத்துள்ள பத்தாம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் பலவற்றை ஒப்பு நோக்கும் போது இரண்டிலும் காணப்படும் சொற்றொடரின் அடிப்படை வடிவம் ஒன்றே எனலாம்.

இக்கல்வெட்டுகளில் வட்டார மொழிக்குரிய சில சிறப்புத் தன்மைகளையும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

மொழிக்கும், வட்டார மொழிக்கும் உள்ள வேறுபாடுகளைக் கடந்து கேரளக் கல்வெட்டுகள் தமிழ் மொழியில் அமைந்தன என்றே கூறவேண்டும்.

உள்ளூர் மொழியில் இலக்கியம் என்று கூறத்தக்க ஒன்றும் இக்காலக் கட்டத்தில் மேற்குக் கரையில் தோன்றவில்லை.

கல்வெட்டுகளில் காணப்படும் வட்டார வழக்குகளும், பேச்சு வழக்குகளும் மொழியில் ஒன்றிப் போய், வட்டார மொழி என்ற நிலையிலிருந்து மலையாளம் என்ற தனிமொழி மாறுபட்டுத் தோன்றியது.

ஒவ்வொரு பகுதியிலும் எழுவாய் முதல் பயனிலை வரையிலும் உள்ள சொல் அமைப்பு, தனித்துவம் பெற்றுள்ள பாங்கினைக் கேரளாவைத் தவிர வெளியில் எங்கும் காண முடியாது. எனவே மலையாளம் என்பது தனி மொழியாக 12—ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் உருவெடுத்தது என முடிவு செய்யலாம்.

## கால்டுவெல் அவர்களின் கோட்பாடு

மலையாளம். தமிழின் மிகப் பண்டைய கிளை மொழியாகும். வினைச்சொல் பயன்பாட்டிலும், ஏற்றுக் கொண்டுள்ள ஏராளமான சமஸ்கிருதச் சொற்களினாலும் தற்போது மலையாளம் தமிழிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது. அது திராவிட மொழிக் குடும்பத்தின் தனிப்பட்ட உறுப்பினர் என்று கருதுவதை விடத் தமிழின் வட்டார மொழி வடிவம் என்றே கருதலாம்.

# கேரளமும் வட்டெழுத்தும்

## கேரளத்தின் தொன்மை

தமிழகத்து முடியுடை மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்களுள் முதலிடம் பெற்று விளங்குபவர், சேரர்கள். இவர்களுடைய சேரநாடு, இன்றைய கேரளம். இது மிகப் பழமையான நாடாகும்.

கேரளத்தைப் பற்றிய குறிப்புகள், இராமாயணத்திலும் பாரதத்திலும் காணப்படுகின்றன. கி.மு. 4—ஆம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வருகை தந்த மெகஸ்தனீஸ் என்னும் கிரேக்கத் தூதர் தம்முடைய நூலான இந்திகாவில் கேரளத்தைப் பற்றிக் கூறியுள்ளார்.

அசோகரது 2, 13—ஆம் பாறைக் கல்வெட்டுகளில் கேரளம் ஒரு முக்கிய நாடாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கேரளம் — தமிழ்நாடே!

இப்பகுதியில் பண்டைய காலத்தில் தமிழ் பேசும் மக்களே வாழ்ந்து வந்தனர். இதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. சங்கப் புலவர்கள் சேரரைத் தமிழரசராகவே பாடியுள்ளனர்.

பதிற்றுப்பத்தில், உதியன் சேரல், செங்குட்டுவன் முதலிய சேர அரசர்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

தொல்காப்பியரும் சேர நாட்டினர் என்று சிலர் கருதுவர். ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரம் சேர இளவலால் எழுதப்பெற்ற உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் ஆகும்.

## சேரலம் — கேரளம்

சேர நாட்டினைக் 'கேரள' என்று வட மொழி இலக்கியங்களும், அசோகனது சாஸனங்கள் முதலிய வட பாரதக் குறிப்புகளும் கூறுகின்றன. 'சேரலம்' என்ற தமிழ்ப் பெயரே வடமொழி வழக்குப்படி 'கேரளம்' என்று வழங்கப்பட்டது.

ஆயினும், வடமொழியில் 'கேரம்' என்று கூறப்படும் தென்னை மரங்கள் கேரளப்பகுதியில் மிகுதியாகக் காணப்படுவதால், தென்னை மரங்கள் நிறைந்த நாடு என்ற பொருளில் 'கேரளம்' என்று வழங்கப்படுகிறது என்றும் சிலர் கூறுவர்.

## ரோமானியர்களுடன் வாணிகத் தொடர்பு

கிறித்துவ சகாப்தத்தின் தொடக்கத்தில் கிரேக்கர்களும் உரோமானியர்களும் சேர நாட்டுடன் பெருமளவில் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். ஏலம், கிராம்பு, இஞ்சி மஞ்சள் முதலியவை சேர நாட்டிலிருந்து ஏற்றுமதியாயின.

இந்த வாணிகத்தில் அராபியர்களும் ஈடுபட்டிருந்தனர். ரோமானியப் பேரரசு ஏற்பட்டவுடன் ரோமானியர்கள் இந்தியாவுடன் நேரடியான வர்த்தகத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டனர். அதனால் அராபியர் கள் இந்த வாணிகத்திலிருந்து பின் வாங்கினர்.

கி.பி. 45—ல் உறிப்பாலஸ் என்னும் ரோமானியன், தென்மேற்குப் பருவக் காற்றைக் கண்டு பிடித்தவுடன், ஏடன் துறைமுகத்திலிருந்து முசிறித் துறைமுகத்தை 40 நாள்களில் கப்பல்களில் சென்றடைந்தனர். ரோமானியர்கள் தங்கத்தையும், வெள்ளியையும் ஏராளமாகக் கொண்டு குவித்தனர். இதனைத் தமிழ் இலக்கியங்களும் உறுதிப்படுத்துகின்றன. 1

ரோமானியக் காசுகள் கேரளத்தின் பல பாகங்களிலும் கிடைத் துள்ளன.

### அராபியர் அழைத்த சொல்

கி.பி. 3—ஆம் நூற்றாண்டுக்குப்பின் ரோமப் பேரரசின் வீழ்ச்சி காரணமாக, அவர்கள் சேர நாட்டுடன் கொண்டிருந்த வாணிகத் தொடர்பு குறைந்தது.

பிற்காலத்தில், வாணிகத்தின் பொருட்டு சேர நாட்டிற்கு வந்த அராபியர் முதலிய பிற நாட்டினர் அரபிக் கடலின் கரையில் உள்ள நாடுகளைப் பொதுவாக ‘மலபார்’ அல்லது ‘மலிபார்’ என்று அழைத் தனர்.

ஐரோப்பியர் தமிழ் மொழியையே மலபார் என்று அழைத்தனர். மலையைச் சேர்ந்த நாடு என்னும் பொருளில் இவ்வாறு அழைத்திருக் கலாம்.

### சங்ககாலம்

சங்க காலத்தில் சேர நாட்டின் தென் பகுதி, ஆய் மன்னர்கள் ஆட்சியில் இருந்து வந்தது.

சங்க இலக்கியங்களில் இவ் ஆய்குல மன்னர்களைப் பற்றிய குறிப்பு கள் காணப்படுகின்றன. அவர்களில் ‘ஆய் அண்டிரன்’ என்பவன் சிறப் பாகக் காணப்படுகிறான்.

ஆய் மன்னர்களின் ஆட்சி பாண்டிய மன்னர்களுக்கும் சேர மன்னர் களுக்கும் இடையில் ஒரு தடுப்புச் சுவர் போல் இருந்தது.

### சேரர்கள்

கிறித்தவ சகாப்தத்தின் தொடக்கக் காலத்திலேயே சேரர்கள் கேரளத் தின் சிறந்த அரசர்களாகப் பெயர் பெற்று விட்டனர் என்பது குறிப் பிடத்தக்க உண்மையாகும்.

சேரர் பரம்பரையில் உதியன் சேரல், நெடுஞ்சேரல், செங்குட்டுவன் ஆகியோர் மன்னர்களாக முடிசூட்டிக் கொண்டு நீண்ட காலம் ஆட்சி

1. ‘பொன்னோடு வந்து கறியோடு பெயரும்’ அகம். 147

யில் இருந்தனர். ஏனையோர் சில ஆண்டுகள் மட்டுமே ஆட்சியில் இருந்தனர்.

பதிற்றுப்பத்தின் முதல் ஆறு பத்துகள் 'உதியன் சேரல் வழியினர்' மீதும், இறுதி நான்கு பத்துகள் 'செல்வக்கடுங்கோ வழியினர்' மீதும் பாடப்பட்டவை.

உதியன் சேரல் வழியினருக்கும் செல்வக்கடுங்கோ வழியினருக்கும் இருந்த தொடர்பு சரியாகத் தெரியவில்லை.

## கேரள வரலாற்றின் இருண்ட காலம்

சங்க காலத்திற்குப் பின், கேரள வரலாறு ஒரு நீண்ட இருண்ட காலத்தில் இருந்ததாகக் கருதப்படுகிறது. 6, 7, 8—ஆம் நூற்றாண்டுகளில் கேரள வரலாறு ஒன்றும் தெரியாமல் மறைந்து விட்டதாகக் கருதப் படுகிறது.

ஆயினும், இடைக்காலப் பாண்டியர்களின் செப்பேடுகளான வேள்விக்குடி, தளவாய்புரம் ஆகிய செப்பேடுகளில் சேரர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுவதால், இந்தக் காலத்திலும் சேரர்கள் பேரரசர் களாக விளங்கியிருக்கக்கூடும் என்று சிலர் கருதுகின்றனர்.

இக்காலத்தில் சாளுக்கியர்கள், பல்லவர்கள், பாண்டியர்கள், இராஷ்டிரகூடர்கள் ஆகியோர் கேரளத்தை வெற்றி கொண்டதாகச் செய்திகள் உள்ளன.

களப்பிரர்களின் வெற்றியின் காரணமாகக் கேரளமும் பாதிக்கப் பட்டுள்ளது. ஆகவே, 5—ஆம் நூற்றாண்டிலிருந்து 8—ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் வரையுள்ள காலத்தை இருண்ட காலம் என்று கேரள வரலாற்று ஆசிரியர் கருதுகின்றனர்.

மீண்டும் சேரமன்னர்களின் ஆட்சி ஏற்பட்டபின், இந்த இருண்ட காலம் அகன்றதாகக் கருதப்படுகிறது.

## குலசேகரவர்மன் தோற்றுவித்த இரண்டாவது சேரப் பேரரசு

குலசேகரவர்மன் என்பவன் கி.பி. 8—ஆம் நூற்றாண்டின் தொடக்கத் தில் சேரர் ஆட்சியை மீண்டும் தோற்றுவித்தான். இவன் மரபு, 'குல சேகரன் பரம்பரை' அல்லது 'பெருமாள் மரபு' என்று வழங்கப் படுகிறது.

இந்த மரபினர் கி.பி. 800 முதல் 1102 வரை ஆட்சி செய்ததாகக் கருதப்படுகிறது.

இவர்களின் தலைநகர் திருவஞ்சிக்களம். இதை மகோதபுரம் என்றும் அழைப்பர்.

அண்மைக் காலத்தில் கிடைத்த கல்வெட்டு ஆராய்ச்சியின் பயனாக இந்த இடைக்காலத்தின் வரலாறு நன்கு தெளிவாகியுள்ளது.

இதுகாறும், அக்காலக் கட்டத்தில் கேரளம் சிறு சிறு மன்னர்களின் ஆட்சியில் சிதறிக் கிடந்ததாகக் கூறப்பட்டது.

ஆனால், அண்மைக்கால ஆராய்ச்சியின் பயனாக இரண்டாவது சேரர் பேரரசு சுமார் முந்நூறு ஆண்டுகள் தொடர்ந்து இருந்ததாகக் கருதப்படுகிறது.

மொத்தம் பதின்மூன்று அரசர்கள் அந்த இடைவெளிக் காலத்தில் ஆண்டுள்ளனர்.

## கேரள வரலாற்றின் பொற்காலம்

கேரளத்தின் பொற்காலமென்று குலசேகரர்களின் ஆட்சியை வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். குறிப்பாக ஒன்பது, பத்தாம் நூற்றாண்டுகளில் கேரளத்தில் நிலையான ஆட்சி நடைபெற்றது.

குலசேகரப் பேரரசின் சிறப்பான ஆட்சிக் காலத்தில் கேரளம் முழுவதும் அவர்களிடம் இருந்தது. மற்றும் நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர், சேலம், கோவை மாவட்டங்களிலுள்ள ஒரு சில பகுதிகளும் கூட சேரர்களின் ஆளுகைக்குள் இருந்தன.

இவ் அரசு மரபினர்கள் 'பெருமாள் மரபினர்' என்று அழைக்கப் பட்டனர். குலசேகரப் பெருமாள், சேரமான் பெருமாள் என்ற பெயர் கள் இதனால் வந்தவையே.

இவர்கள் தலைநகரான மகோதயபுரத்தை 'மகோதை' என்று அழைத்தனர்.

குலசேகரர் ஆட்சிக் காலத்தில் வெளிநாட்டுடன் பெருமளவில் வாணிகத் தொடர்பு இருந்து வந்தது. காந்தளூர், கொல்லம், விழிஞம், கண்ணனூர் ஆகியவை முக்கிய துறைமுகங்களாகத் திகழ்ந்தன. அப் போது சீன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு இருந்தது.

## குலசேகரர்களின் வீழ்ச்சிக் காலம்

குலசேகரர்களின் ஆட்சி 11—ஆம் நூற்றாண்டிலிருந்து வீழ்ச்சி பெற ஆரம்பித்தது. சேரர்களுக்கும் சோழர்களுக்குமிடையே நடைபெற்ற நீண்ட போரினால், பல துறைகளிலும் கேரளம் பாதிக்கப்பட்டது.

செல்வச் செழிப்புடனும் கலை வளர்ச்சியுடனும் விளங்கிய சேர நாடு, கி.பி. 999—ஆம் ஆண்டு நிலைகுலையத் தொடங்கியது.

சோழர்களின் படையெடுப்பினால் கேரளத்தின் பொருளாதாரத்தி லும் சமுதாய அடிப்படையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

## நம்பூதிரிகளின் அரசியல் பண்பாட்டு நுழைவு

கி.பி. பதினோராம் நூற்றாண்டில் நம்பூதிரிகள் சேர மன்னர்களுக் குப் பலவகைகளிலும் உதவியாக இருந்தனர்.

இவர்கள் தங்கள் மரபுத் தொழிலான, வேதம் ஓதுதலை விட்டு விட்டுப் போர்க்களத்தில் இறங்கினர்.

கல்வி புகட்டுவதற்காக ஏற்படுத்திய சாலைகளில் போர் முறைகள் கற்பிக்கப்பட்டன.

நம்பூதிரிகளின் செல்வாக்கினால் வட மொழியின் செல்வாக்கு கேரளத்தில் அதிகரித்தது.

'மக்கட்தாயம்' என்ற பரம்பரை முறை மாறி 'மருமக்கட்தாயமுறை' ஏற்பட்டது.

அதனால் தந்தை, தன் மகனுக்குத் தன் சொத்தைக் கொடுப்பதற்குப் பதில், தன் சகோதரியின் மக்களுக்குச் சொத்தைக் கொடுக்கும் நிலை ஏற்பட்டது.

முன்குடுமி, பெண்கள் முண்டு உடுத்துதல் போன்ற மாறுபட்ட பழக்க வழக்கங்கள் மலையாளத்தினருக்கு ஏற்பட்டன. இதனால் அவர்கள் தனித்தன்மையுடன் மாறுவதற்கு வழி ஏற்பட்டது.

சோழர்—சேரர் நீண்ட போரின் காரணமாக வெளிநாட்டுடன் தொடர்பு அற்றுப் போயிற்று. நாடு துண்டாயிற்று. 12—ஆம் நூற்றாண்டில் தோன்றிய அசாதாரண நிலையின் காரணமாக அரசு செல்வாக்கு இழக்கும் நிலை ஏற்பட்டது.

## வேணாடு

குலசேகர மன்னர்களின் ஆட்சியில் ஒரு சிறு நாடாக இருந்த 'வேணாடு' குலசேகரப் பேரரசு சரிந்தபின் சுதந்திர நாடாகத் தலை தூக்கியது.

இந்தக் காலம் 12—ஆம் நூற்றாண்டின் தொடக்கம் என்று கூறலாம். பழைய ஆய் மன்னர்களின் மரபினரே, வேணாட்டு மன்னர்கள் என்றும் கருதப்படுகிறது.

## இரவிவர்ம குலசேகரர்

வேணாட்டு மன்னராக இரவிவர்ம குலசேகரர் கி.பி. 1299—ல் பதவி ஏற்றார். கி.பி. 1344 வரை ஆட்சி செய்தார். இவர் பாண்டிய மன்னன் மாறவர்மன் குலசேகரனின் மகளைத் திருமணம் செய்து கொண்டார்.

பாண்டிய நாட்டில் கி.பி. 1311—ஆம் ஆண்டு மாலிக்காபூர் படையெடுப்பின் காரணமாக ஏற்பட்ட குழப்பத்தில் பாண்டிய நாடு அமைதி குலைந்தது.

இந்த நேரத்தில் இரவிவர்மர் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வீரபாண்டியனைத் தோல்வியுறச் செய்தார்.

இரவிவர்மர் தென் நாட்டின் பேரரசனாகக் கி.பி. 1312—ஆம் ஆண்டு முடி சூட்டிக் கொண்டார். அப்போது அவருக்கு வயது நாற்பத்தாறு ஆகும்.

அவர் காஞ்சிபுரத்தைத் தனது 48—வது வயதில் கைப்பற்றினார் அவருடைய ஆட்சிக் காலம் தென்னாட்டு வரலாற்றில் ஒரு எரி நட்சத்திரமாகப் பிரகாசித்துப் பிறகு மறைந்து விடுகிறது.

அவர் ஆட்சிக் காலத்தில், வேணாடு செல்வச் செழிப்புடன் விளங்கியது; கொல்லம் ஒரு சிறந்த வாணிகத் தலமாயிற்று; சீன நாட்டுக்கும் கேரளத்துக்கும் இடையே இருந்த வாணிகத் தொடர்பு நல்ல வளர்ச்சியுற்றது.

இக்காலத்தில் வழக்கிலிருந்த எழுத்துமுறை தமிழ் வட்டெழுத்தாகும்; பல இன்றியமையாத செப்பேடுகளும், கல்வெட்டுகளும் தமிழ் வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டன.

13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மலையாள மொழி நன்கு வளரத் தொடங்கியது. 'உன்னி நீலி சந்தேசம்' போன்ற மணிப்பிரவாளக் கவிதைகளின் மூலம், மலையாளத்தில் அப்போதிருந்த வாணிகச் செழிப்பை அறியலாம்.

14—ஆம் நூற்றாண்டில் தமிழ் நாடும், சேர நாடும் கொண்டிருந்த மொழி, இலக்கியப் பண்பாட்டுத் தொடர்புகள் பெரும்பாலும் அற்று விட்டன.

இச்சூழலில் மலையாளத்தின் செல்வாக்கு வளரத் தொடங்கியது. வடமொழியின் செல்வாக்கு அதிகரித்து விட்டதால் மலையாள மொழிக்குத் தமிழ் நெடுங்கணக்கு நிறைவு அளிக்கவில்லை. கிரந்த எழுத்துகளைச் சில மாற்றங்களுடன் மலையாள மொழி ஏற்றுக் கொண்டது.

தமிழ் வட்டெழுத்து வீழ்ச்சியுறத் தொடங்கியது.

கிரந்த எழுத்துகளைச் சில மாற்றங்களுடன் மலையாள மொழி ஏற்றுக் கொள்ளும் வரையில் தமிழ் வட்டெழுத்து மலையாளத்தில் வழக்கில் இருந்ததை நாம் நினைவுகூர்தல் வேண்டும்.

## பிற்கால வட்டெழுத்து

சேர நாட்டில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து வட்டெழுத்துக் கல்வெட்டுகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. சேர நாடு தற்கால கேரள நாட்டின் நிலப்பகுதியே ஆகும். கரூரைத் தலைநகராகக் கொண்ட சங்க காலச் சேர நாட்டைக் குறிப்பிடவில்லை. சேர நாட்டில் வட்டெழுத்து பல மாறுதல்கள் பெற்று 18-ஆம் நூற்றாண்டு வரை வழக்கில் இருந்திருக்கிறது. காலம் செல்லச் செல்ல ஓர் ஒழுங்கில்லாமல் அவ்வட்டெழுத்துகள் எழுதப்பட்டன. இவ்வாறு மாறுதல் அடைந்த வட்டெழுத்தைத் திருவிதாங்கூர் பகுதிகளில் 'மலையாண்ம' என்றும், கேரளத்தின் வட பகுதிகளில் 'கோலெழுத்து' என்றும் அழைத்தனர்.

## திரு டி.எ. கோபிநாதராவின் கருத்து

தொல் எழுத்தறிஞர் திரு கோபிநாதராவ் வட்டெழுத்து கல்வெட்டுகளையும், செப்பேடுகளையும் படிப்பதில் மிக்க தேர்ச்சி பெற்றவர். சேர நாட்டு வட்டெழுத்துகளைப் பற்றி அவர் கூறும் கருத்துகள் மிகவும் பயனுடையவை:

> 10-ஆம் நூற்றாண்டு மற்றும் 11ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும், 'க' வின் வடிவத்திற்கும் 'ச' வடிவத்திற்கும் அதிக வேறுபாடில்லை. 'ச' வடிவத்தின் அடி வளைவு 'க' வடிவ அடி வளைவை விடச் சற்று பெரியதாக எழுதப்பட்டது. இதர வடிவங்கள் பெரும்பாலும் அதன் முந்திய காலத்து வடிவங்களைப் போலவே இருந்தன. பெரும்பாலும் கோணங்கள் இல்லை. வட்டெழுத்து வடிவங்களே இருந்தன.
>
> பாஸ்கர இரவிவர்மனின் செப்பேட்டிலுள்ள சில எழுத்துகளில் வட்ட வடிவம் இல்லாமல் கோணங்கள் இருக்கின்றன. இந்த மாதிரியான வடிவமைப்பு 14-ஆம் நூற்றாண்டு வரை காணப்படுகிறது.
>
> 14-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் வடிவங்களின் அமைப்பில் இருந்த ஒழுங்கு குலையத் தொடங்கியது. பாளியம் செப்பேட்டைப் படித்த திரு கோபிநாதராவ் கீழ்க்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார். பாளியம் செப்பேட்டின் காலம் கி.பி. 1663.
>
